*Supplement to the "Janopakari."*



SIR WILLIAM WEDDERBURN

ஸர் வில்லியம் வெட்டர்பர்ன்

# ஜனோபகாரி.

(JANOPAKARI)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புஸ்தகம் 3. Vol. III. | பிங்கள௵ தைமீ, JANUARY 1918. | சஞ்சிகை 1. No. 1.


## JANOPAKARI.

A high class illustrated Tamil Monthly Review devoted mainly to social, Literary, Educational and Economic topics of interest.

Selections from important speeches and papers on Economic subjects; notes of the month on Economic matters.

Pages for Boys and Ladies: A speciality.

### Rates of Subscription (Post Free.)

| | | Inland. | Foreign. |
|---|---|---|---|
| Per annum | Rs. | 3 0 0 | 4 8 0 |
| Single copy | ,, | 0 5 0 | 0 6 0 |
| Sample copy | ,, | 0 1 0 | 0 2 0 |

### Rates of Advertisement.

| | | | |
|---|---|---|---|
| 1 page | Rs. | 8 0 0 | per month. |
| ½ ,, | ,, | 4 0 0 | ,, |
| ¼ ,, | ,, | 2 0 0 | ,, |

All orders for advertisement must accompany with advance.

**To Contributors**:—Contributions on subjects specified above will be received for publication. The articles should be written in plain colloquial Tamil with ink on one side of the paper only. Accepted articles will be paid for on publication. The copyright and right of translation of the articles paid belongs to us. Stamps should be enclosed for the return of rejected manuscripts.

All letters, contributions and remittances etc should be addressed to the Proprietors:

V. N. SAMA RAO & Co.,
VELLORE, (SOUTH INDIA.)

## ஜனோபகாரி.

பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து அவர்களின் முன்னேற்றத்திற்கென்றே உழைத்து வரும் ஓர் சிறந்த சித்திரப்படங்கள் அடங்கிய தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

இதில் கல்வி, வியவசாயம், வியாபாரம், கைத்தொழில், கூட்டுறவு ஆகிய இவைகளைக்குறித்த பல விஷயங்களும், ஜனசமூகத்தின் அபிவிருத்திக்குரிய பல விஷயங்களும், சிறந்த நீதிகளைப் போதிக்கவல்ல நாவல்களும் நாடகங்களும், மாணவர்களுக்கு உபயோகமான வியாசங்களும், நம் தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மகான்களின் ஜீவிய சரித்திரங்களும், ஸ்திரீகளுக்கும், சிறுவர்களுக்கும் உபயோகமான பல விஷயங்களும் சிறந்த கற்றறிந்தவர்களால் மிகவும் தெளிவான நடையில் எழுதப்பட்டு வருகின்றன.

### தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

| | | உள்நாடு. | வெளிநாடு. |
|---|---|---|---|
| ஒரு வருஷத்திற்கு | ரூபா | 3—0—0 | 4—8—0 |
| தனிப்பிரதி | ,, | 0—5—0 | 0—6—0 |
| மாதிரிகாபி | ,, | 0—1—0 | 0—2—0 |

### விளம்பர விகிதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1-பக்கத்திற்கு | மாதம் 1-க்கு | ரூபா | 8—0—0 |
| ½ ,, | ,, | ,, | 4—0—0 |
| ¼ ,, | ,, | ,, | 2—0—0 |

வியாசமெழுதுவோர் கவனிக்கவேண்டியவை:—வியாசம் எழுதுபவர்கள் மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயங்களைப்பற்றி எழுதலாம். ஒவ்வொரு வியாசமும் காகிதத்தின் ஒரே பக்கத்தில் அரைப்பாதியில் எழுதி யிருத்தல்வேண்டும். கடினமான தமிழ் உதவாது. வியாசங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டால், பிரசுரமானதும் எழுதியவர்களுக்குத் தக்க சம்பாவனை செய்யப்படும். சம்பாவனை செய்திருக்கும் வியாசங்களின் காபிரைட் எங்களைச் சேர்ந்தது. ஒப்புக்கொள்ளப்படாத வியாசங்களைத் திரும்பவேண்டுவோர் தபால் ஸ்டாம்புகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லாக்கடிதங்களும், சந்தாப்பணம் முதலானவைகளும்கீழ்க்கண்டவிலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
இராயவேலூர், (தென்னிந்தியா.)

461990 Hm211, N16N N16-3

# The Village Panchayath in Baroda.

## பரோடாவில் கிராம பஞ்சாயத்து.

பரோடா [illegible] மிஸ்டர் வி. பி. மாதவ ராவ் பி. ஏ. ஸி. ஐ. இ. அவர்கள் திவானாயிருக்கும்பொழுது வெளியான 1914-15-ம் வருஷத்து நிர்வாக அறிக்கையில் பரோடா பஞ்சாயத்து ஸம்பந்தமான சில விஷயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றின் சில முக்கிய விஷயங்களை இங்கு எழுதுகிறோம்.

இந்தியாவில் முன்னே மத விஷயமாயும், ராஜ்யத்தைக் கைப்பற்றும் விஷயமாயும் ராஜாக்கள் அடிக்கடி படையெடுத்துச் சண்டையிட்டு வந்தார்கள். இதன் காரணமாக, கிராம சமூஹத்தார்களின் பொருளாதார நிலைமையானது பல வழிகளிலும் பாதகப்பட்டு வந்தது. ஆனாலும், அவர்கள் தங்கள் கிராம சம்பந்தமான நிர்வாக காரியங்கள் சீர்கேடடையாமல் பாதுகாத்து வந்தார்கள். இம்மாதிரியான ஸ்தாபனங்கள் பதினெட்டாம் நூற்றாண்டிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் மிகவும் செழிப்புற்று நடந்து வந்தன. பரோடாவில் ரயத்வாரி சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, கிராம பஞ்சாயத்தானது நாளடைவில் அழியத் தலைப்பட்டது. ஆனால், நிலத்தீர்வையை ஏற்படுத்துவோர்கள் இவை அழிந்து போகாமல் பாதுகாத்து வந்தார்கள். அப்போது அங்கு ஸெட்டில்மெண்டு உத்தியோகஸ்தராயிருந்த மிஸ்டர் எல்லியட் என்பவர், 1893-ம் வருஷத்தில் இப்பஞ்சாயத்துக்கள் மீண்டும் அழிந்துபோகாவண்ணம் நிலைநிறுத்துவதற்கான பல யோசனைகளைக் கூறிவந்தார். இவற்றை மகாராஜா அவர்கள் கைக்கொண்டு தக்க ஆதரவளிக்கலானார். கிராம ஸமூஹத்தினருக்குத் தங்களைத்தாங்களே ஆளுந்திறமை ஏற்படவேண்டுமென்பது இவருடைய கருத்து.

பரோடா கிராம பஞ்சாயத்தானது 1902-ம் வருஷத்தில் சீர்திருத்தி அமைக்கப்பட்டது. அப்போது அது சம்பந்தமாய் ஏற்படுத்தப்பட்ட சில முக்கிய விதிகள் வருமாறு:—

ஆயிரம் அல்லது அதற்கு அதிகமான ஜனங்களையுடைய ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்தப்படவேண்டும். அப்படி ஒரு கிராமத்தில் ஆயிரம் ஜனங்களுக்குக் குறைவாயிருக்குமானால், பல கிராமங்களைச் சேர்த்துப் பொதுவாக ஒரு பஞ்சாயத்தை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்து ஸபையிலும் ஐந்து முதல் ஒன்பது பேர்கள் வரை அங்கத்தினர்களாக ஏற்படுத்தப்படுவார்கள். இவர்களில் ஒரு பகுதியாரை ஜில்லா உத்தியோகஸ்தர்களும், மற்றொரு பகுதியாரை வியவசாயிகளும் பொறுக்கியெடுப்பார்கள். கிராமாதிகாரி பஞ்சாயத்து ஸபைக்கு அக்கிராசனம்வகிப்பார். கிராமக் கணக்கனும், உபாத்தியாயரும் உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தினராவர். பஞ்சாயத்தார்கள், கிராம ரஸ்தாக்கள், கிணறுகள், குளங்கள், பள்ளிக்கூடங்கள், சத்திரங்கள், தேவாலயங்கள், வியவசாயப் பண்ணைக[ள்], இராஜாங்க சம்பந்தமானதும், பொது சம்பந்தமுமான சொத்துக்கள் முதலியவற்றை மேற்பார்வை செய்துவரவேண்டும். பஞ்சக்காலங்களிலும் வைத்திய சம்பந்தமான பரிகாரங்களிலும் பஞ்சாயத்தார்கள் உதவி செய்யவேண்டும். கிராம முனிசிப்புக்கு ஸிவில் வியவகார விஷயங்களில் உதவியாயும், சப்ரெஜிஸ்டிராரின் வேலைகளுக்கு ஆதாரவாயும பஞ்சாயத்தார்கள் உதவி புரியவேண்டும். இவர்கள், நிலங்களின் எல்லைக் கல்லுகள் சரியாயிருக்கின்றனவா வென்பதையும், கால்நடைகளின் தொழுவங்கள் சரியாக வைக்கப்பட்டுள்ளனவா வென்பதையும் கவனிக்க வேண்டும்.

பரோடாவில் மொத்தம் 3054 கிராமங்கள் உள்ளன; அவற்றில் 2287 கிராமப் பஞ்சாயத்துக்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

1906-ம் வருஷத்தில் கிராம பஞ்சாயத்தாருக்கு ஒருவரை வேலைக்குநியமிக்கவும், வேலையை விட்டு நீக்கவும், தண்டிக்கவும், ரஜா கொடுக்க

வும், ஜாமினிலிருப்பவர்களுக்குப் பதில் ஆட்களை ஏற்படுத்தவும், கிராமத் தலைவன், கணக்கன், ஹவில்தார் ஆகிய இவர்களைத் தவிர மற்ற வேலைக்காரர்களை நடத்தவும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. இவர்கள் தாலுக்கா கஜானாவிலிருந்து பணம் பெற்று மேற்சொன்ன அதிகாரிகளைத் தவிர மற்ற கிராம வேலைபாட்களுக்குப் பட்வாடா செய்ய அதிகாரம் பெற்றிருந்தார்கள். 1907-ம் வருஷத்திலும் 1909-ம் வருஷத்திலும் சில யோக்கியதையுள்ள பஞ்சாயத்தார்களுக்குச் சிவில் கிரிமினல் முதலிய வியவகாரங்களில் தீர்ப்புச்சொல்வதற்கு வேண்டிய சில விதிகள் ஏற்படுத்தப்பட்டன. 1914-15-ம் வருஷத்தில் 159 பஞ்சாயத்துக்கள் இப்படிப்பட்ட 769 கேஸ்கள் வரை தீர்ப்புச்செய்திருக்கின்றன. லோகல் போர்டு சட்டப்படி ஒவ்வொரு பஞ்சாயத்தும் தனது சபையினின்று ஒரு மெம்பரைத் தாலுக்கா போர்டுக்கு அனுப்ப வேண்டும்.

பரோடாவில் கிராம பஞ்சாயத்து ஸம்பந்தமாக மேலே கூறிய சீர்திருத்தங்கள் கிராம சமூகத்தார்களுக்கு மிக்க பலனைக் கொடுக்கத் தக்கவையாயிருந்தன. அங்குக் கிராம பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் தக்க பலனைக் கொடுப்பதுபோல, ஏன் இந்தியாவின் இதர பாகங்களிலும் இவை தக்க பலனைக் கொடுக்கக்கூடாது? பரோடாவில் இப்போது இருக்கும் நிலைமையில் படியாதவர்களும் பஞ்சாயத்தின் அக்கிராசனாதிபத்தியம் வகிக்க நேரிடுவதாலும், அவர்கள் அதிகாரிகளின் போக்கையே அநுசரிக்க வேண்டியிருப்பதனாலும் பஞ்சாயத்து நிர்வாகத்தில் சிலகோளாறுகள் ஏற்பட ஏதுவாகின்றது. ஆனால், இப்போது அங்குக் கட்டாயக்கல்வியின் காரணமாக ஒவ்வொரு சிறு பிள்ளையும் கல்விபெற்று வருவதனால், சமீப காலத்திற்குள்ளேயே இக்குறை நீங்கிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

---

## Shantiniketan.

## சாந்திநிகேதனம்.

நமது இந்தியாவில் கவிச் சக்கரவர்த்தியாக விளங்கி, இந்தியாவில் மாத்திரமல்லாமல் பிற நாடுகளிலும் புகழ்பெற்ற ஸர் ரவீந்திரநாத் தாகோர் மகானை எவரும் அறிவர். உலகமுழுதும் மெச்சும் "நோபல்" வெகுமதியைப்பெற்ற பிறகே இவருடைய கவித்திறமையும், புகழும் எல்லோருக்கும் வெளிபாயிற்று. இவர் மிக்க பெருமை பொருந்திய புராதன தாகோர் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் 1861-ம் வருஷத்தில் ஜனனமானார். இந்தச்சாந்திநிகேதன ஆச்ரமத்துக்கு இப்போது சொந்தக்காரர் நம் தாகோர் மகானே. இக்கலாசாலையானது சென்ற 17 வருஷங்களாக நிலைத்துள்ளதேனும், 1914-ம் வருஷம் வரையில் வங்காள மாகாணத்தைத் தவிர்ந்த பிற நாடுகளில் அறியப் பெற்றதாக இருந்திருக்கவில்லை.

பூர்விக ஆசார முறையில் ஒரு கலாசாலை ஸ்தாபிக்கவேண்டுமென்ற நினைவு நமது தாகோரின் பிதாவான மஹரிஷி தேவேந்திரநாத் தாகோர் அவர்களுக்கு வந்தது. அகன்ற ஆகாயம் பூமி இவற்றின் விரிந்து பரந்த இடங்களை ஆத்மாவுக்கு (ஆத்ம) சக்தியைத் தந்து ஜடமாகிய தேஹக்கட்டிலுள்ள பற்றை ஒழித்துக் காட்டுவனவென்று நன்கு அனுபவ முறையில் உணர்ந்த மஹரிஷியவர்களே இப்போது கலாசாலை இருக்கும் இடத்தைத் தெரிந்தெடுத்தவர்கள். அங்கே அவர் நிஷ்டையிருந்த இடம் இரண்டு ஏழிலைப் பாலைமரங்களின் கீழிருக்கிறது. அங்கு இப்போதும் அடையாளமாகப் பின்வரும் வாக்கியம் வங்காளி பாஷையில் எழுதப் பெற்றிருக்கிறது: "அவரே எனது உயிர்க்குச் சுகம் தருபவராகவும், என் இருதயானந்தகராகவும் என் ஆத்மசாந்திதராகவும் இருக்கிறார்."

இந்த ஆசிரமமானது போல்பூரில் இருக்கிறது. ஈஸ்டு இந்திய ரெயில்வேயின் மேல், கல்கத்தாவுக்கு 99 மைலில் உள்ளதும், பரத்வா

னுக்கு 33 மைலில் உள்ளதுமான போல்பூர் ஸ்டேஷனுக்குச் சுமார் இரண்டு மைல் தூரத்தில் அமைக்கப்பெற்றிருக்கிறது. இந்த ஆசிரமத்து இருப்பிடம் பட்டண வாசத்திலிருந்து விலகினதாகவும், அதனாலேயே சாந்தமும் இன்பமும் நிறைந்துள்ளதாகவும் இருக்கின்றது. ஒரு பகுத்தறிவில் பழகியுள்ள ஜீவனும் பிரகிருதியின் இயற்கை அம்சங்களும் இனிய உறவுடன் கலந்தாடுந் தன்மை அங்கு நன்கு விளங்குகின்றது. அதனைச் சுற்றியுள்ள தோட்டம் நமது ரவீந்திரநாதரால் வைத்து வளர்க்கப்பெற்ற ஸால மரங்களாலும் மாமரங்களாலும் குளிர்ந்து இன்பமளிக்கும் ஆனந்தகரமான நிழலைத் தந்துகொண்டிருக்கிறது. மாணவர்விளையாட்டிடம் பெரியதாகவும் வெளியாகவும் இருக்கிறது. நான்கு புறங்களிலிருந்தும் சுத்த வாயு அபரிமிதமாக வீசிக்கொண்டிருக்கிறது. தோட்டத்துள் பலவிடங்களில் சுத்த நீர்க்கேணிகள் தோண்டப்பெற்றிருக்கின்றன. இதுவே மாணவர்கள் சுத்த மனதுடன் கல்வி கற்றுக்கொள்ளத் தக்க இடம்.

வகுப்புக்கட்கெல்லாம் பாடங்கள் மரங்களின் நிழல்களிலே கற்பிக்கப்படுகின்றன. மரங்களின் கீழே பாய்களின்மேல் பிள்ளைகள் உட்கார்ந்து படிக்கிறார்கள். மழைக்காலங்களில், மாணவர்கள் உபாத்தியாயர்களுடைய அறைகளில் கூடியிருக்கிறார்கள். உபாத்தியாயர்களும் தங்களால் கூடியவரை மாணவர்கட்கு எவ்வழியாலும் உயிர் வாழ்க்கைக்கும் ஆத்ம முன்னேற்றத்திற்கும் வேண்டியவற்றைப் போதித்து வருகிறார்கள். சுலபமாகவும் இயற்கையாகவும் உள்ள வழிகளால் ஆத்மபோதத்தை ஊட்டுகிறார்கள். சித்திரம் சங்கீதம் இவற்றில் பிரியமும் வாஸனையும் உடையவர்க்கு அவையும் முறையே கற்பிக்கப்படுகின்றன.

ஸங்கீத ஸபைகளும் நாடக ஸபைகளும் ஏற்றமாகக் கொண்டாடப்படுகின்றன. ஸங்கீத முறை மனதுக்கு இன்பத்தையும் பக்தியையும் தரக்கூடியதாகவே இருக்கின்றது. மாணவர்கள் மழைக்காலங்களிலும் ஸங்கீதத்தைப் பயில்கிறார்கள். திறந்த வெளியில் காலையாரம்பத்திலும் மாலையாரம்பத்திலும் கால் மணி நேரம் மாணவர்கள் தோத்திரம் சொல்லுகிறார்கள்.

வருஷத்துக்கு இரண்டு முறைதான் மாணவர்கள் புதிதாகச் சேர்க்கப்படுவார்கள். பெரும்பாலும் 11 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் மாணவராகச் சேர்க்கப்படுகிறார்களில்லை; அநேகமாக 8, 9 வயதே சேர்த்துக்கொள்ளத் தக்க காலம். ஒவ்வொரு மாணவனும் பிரவேசச் சம்பளம் ரூ. 20-ம், மாதச் சம்பளம் ரூ. 20-ம் கட்டிச்சேரவேண்டும். மாதச் சம்பளம் சாப்பாட்டுக்கும், வாடகைக்கும், கற்பிப்பதற்குப், விளக்கு, வண்ணான், அம்பட்டன், வைத்தியம் முதலியவற்றின் கூலிக்குமாகக் கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு மாணவனும் காகிதம் முதலியவற்றிற்காக ரூ. 5 கொடுத்துவைத்திருக்க வேண்டும். அது செலவான பின்னர் மறுபடியும் அப்படியே கொடுத்து வைத்திருக்கவேண்டும். எல்லாச் சம்பளங்களும் வங்காள மாதத்தின் முதல் வாரத்திலேயே கொடுக்கப் பெற வேண்டும். இல்லையாயின், மூன்று வாரங்கள் தவணையாகக் கொடுக்கப்படும்; இதனினும் கடந்து சென்றால் ரூ. 2 கூட்டிக்கொடுக்க வேண்டும்.

மாணவர் கலாசாலையில் சேரும்போதே பின்வரும் சாமான்களை ஆயத்தப்படுத்திக்கொண்டு வரவேண்டும். அவை:—மெத்தை, தலையணை, கொசுவலை, விரிப்பு, கம்பளியாகிய படுக்கைச் சாமான்களும், உடைகளும், குளிர்காலத்துக்கு வேண்டிய உடுப்புக்களும், ஒரு பானபாத்திரம் இரண்டு கிண்ணங்கள் ஒரு தாலமாகிய தட்டுமுட்டுச் சாமான்களும், புஸ்தகங்கள், தேசப்படங்கள், மைக்கூடு, காகிதம், எழுதுகோலாகிய படிப்புச் சாமான்களும் ஆம்.

ஸம்ஸ்கிருதம், வங்காளி, இங்கிலீஷ், கணிதம், சித்திரப்பாடம், பூகோள சாஸ்திரம், ரஸாயன சாஸ்திரம், இயற்கைத் தத்துவம், ஸங்கீதம் ஆகிய இவைகள் கற்பிக்கப்படுகின்றன. போதனா முறைக்குப் போதிய பாஷையாக வங்காளியையே கைக்கொண்டிருக்கிறார்களென்பது சொல்லத்தேவையில்லை. இந்தக் கலாசாலையிலிருந்தே

*Supplement to the "Janopakari."*



SIR RABINDRANATH TAGORE

ஸர் ரபிந்தரநாத் டாகூர்

மாணவர்கள் கல்கத்தா யூனிவர்ஸிடியின் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குச் செல்லலாகும். அதாவது வகுப்புக்கள் தாழ்ந்த முறையில் நடத்தப்படவில்லை என்பது இதனால் அறியலாகும். பெரும்பாலும் மாணவர்கள் தங்கள் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையானபிறகு ஆசிரமத்தைவிட்டு விலகிக்கொள்ளுகிறார்கள். ஆனால் சிலர் இருந்து ஸம்ஸ்கிருதத்தை விருத்தி செய்து கொள்ளுகிறார்கள்.

காற்பந்து கிரிக்கட் முதலான சிறு விளையாடல்களே மாணவர்கட்குத் தேகாப்பியாஸ முறைகளாகும்; சில சமயங்களில் உபாத்தியாயர்களுடன் உலாவப் போவதுமுண்டு. தோட்ட வேலைகள் தச்சுத் தொழில் முதலானவைகளும் ஒழிவு நேரங்களில் கற்பிக்கப்படுகின்றன. பூந்தோட்டங்களும் மாணவர்களால் ஆதரிக்கப்படுகின்றன.

மாணவர்களது தினசரி மிகவும் கவனிக்கத்தக்கது: அதிகாலை $4\frac{1}{2}$ மணிக்கு நித்திரை நீங்கி எழுந்திருக்கிறார்கள்; தங்கள் தங்கள் இடங்களைச் சுத்தம் செய்து கொண்ட பிறகே காலைக்கடன் கழிக்கச் செல்கிறார்கள்; பிறகு ஆசிரமத்து வேலைக்காரர்களால் கிணற்றிலிருந்து இறைக்கப்பட்டு நிரப்பப் பெற்றுள்ள தொட்டித் தண்ணீரில் ஸ்நானம் செய்கிறார்கள்; சிறிதுகாலம் திறந்தவெளியில் நிஷ்டையும் தோத்திரங்களும் செய்கிறார்கள்; பிறகு, காலை 7 மணிக்குக் காலையாகாரம் செய்துகொண்டு $10\frac{1}{2}$ மணி வரையில் காலைப் பாடங்களைப் படிக்கிறார்கள். பிறகு, 11-மணிக்கு மத்தியான்னஆகாரம்கொடுக்கப்படுகிறது, மச்ச மாமிசங்கள் ஆசிரமத்தில் சேர்க்கப்படுவதில்லை. பொதுவான சாப்பாட்டறையில்தான் எல்லோரும் கூடியிருந்து சாப்பிடுகிறார்கள்; ஜாதி வித்தியாச நோக்கமுடைய பெற்றோர்கள் விரும்பினால், தனியே இருத்தி அமுது படைக்கப்படும். ஆனால், வந்து சேரும்போது பொதுச் சாப்பாட்டறையில் சேர்ந்துள்ள மாணவன், பிறகு தனியறைக்கு அனுப்பப்படுவதில்லை. யார்க்கும் ஒரேமாதிரி ஆகாரந்தான்; ஆனால், அசௌக்கிய காலங்களில் வைத்தியருடைய கட்டளையின்மேல் தனிச் சாப்பாடு தரப்படும். சமையற்காரர்கள் பிராமணர்களேயாம். காலையும் மாலையும் மாணவர்கட்கென்றே மிகுதியாகப் பால் வாங்கப்படுகிறது.

ஆசிரமம் ஒரு சிறு கிராமம்போலவேயிருக்கிறது. சில உபாத்தியாயர்கள் தங்கள் குடும்பத்துடன் அங்கு வசிக்கிறார்கள். இவர்களுக்கும் கலாசாலைப் போஜனம் இனாமாகவே அளிக்கப்படுகின்றது. நமது தாகோர் குடும்பத்தாரிற் சிலரும் இங்கேயே வசித்துக்கொண்டிருக்கிறார்கள். சாந்திநிகேதனக் கட்டிடமானது தளவரிசை செய்யப்பெற்றதும், மேல்மாடியுள்ளதுமாக இருக்கிறது. கட்டிடச் சாமான்களெல்லாம் பிராசீன முறையை நன்கு தெரிவிக்கக் கூடியனவாக அமைக்கப்பட்டிருக்கின்றன. கொக்கி தாழ்ப்பாள் முதலானவைகளெல்லாம் மரங்களாலேயே ஆக்கப்பெற்றிருக்கின்றன. உயிர் வாழ்க்கையில் அதிகச் செலவைத் தருவனவும், அவசியமில்லாதனவும், டம்பத்துக்கானவுமான ஸாமான்கள் அங்கு விலக்கப்பட்டிருக்கின்றன; சுருங்கிய செலவில் செய்யப்பெற்றனவேனும், அழகாக அமைக்கப்பெற்றிருக்கின்றன. விருந்தினர்க்கென்று ஒரு வீடும் அமைக்கப்பட்டிருக்கிறது. சிற்சில சமயங்களில் சிலர் ஆசிரமத்தைப் பார்த்துப்போகவும் வருவதுண்டு. அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் அங்குச் செய்தளிக்கப்படுகின்றன. ஆனால், அவை வடதேச முறைப்படியிருக்கும்.

மாணவர்கள் மூன்று வகுப்பினராகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள்; பிரிவு வயதையனுசரித்தபடியாகவே இருக்கும். பள்ளிக்கூடமாணவர்களுக்கே ஒருவன் தலைவனாக இருப்பான். ஒவ்வொரு வகுப்பினரும் தத்தமக்கென்று ஒவ்வொரு மாணவச் சிறுதலைவரைப் பெற்றிருப்பார்கள். அந்த மாணவச் சிறு தலைவர்க்கும் துணைத் தலைவர்கள் உண்டு. அறுவர் அல்லது எழுவர்க்கு ஒரு துணைத்தலைவனுண்டு. மாணவரும் அத்தலைவர்க்கடங்கிக் கீழ்ப்படிதலுள்ளவராக இருப்பார்கள். சிறு சச்சரவுகளையும் கீழ்ப்படியாமையையும் மாணவத்தலைவர்களே

விசாரித்துத் தீர்த்துவிடுவார்கள். குற்றத்திற்குத்தண்டனை சிறிதேனும் அது உறுதியுள்ளதாகவிருக்கும். குற்றம் செய்தோர் சிறிது காலத்திற்கு விளையாட்டில் சேர்க்கப்படாமலாவது மற்ற மாணவர்களுடன் பேசக்கூடாமலாவது ஒதுக்கி வைக்கப்படுவார்கள். எல்லா மாணவர்கட்கும் முன்னிலையில் தன் குற்றங்களை ஒப்புக்கொண்டால் மன்னிக்கப்படுவதுண்டு. உபாத்தியாயர்கள் பிரம்பு என்பதனைக் கண்ணாலும் பார்த்திருக்கமாட்டார்கள். அன்றியும், எவ்விதமான குரூர தண்டனையும் அங்கு இல்லை.

மாணவர்கள் மூன்று வங்காளிப் பத்திரிகைகளையும், ஒரு இங்கிலீஷ் பத்திரிகையையும் நடத்தி வருகிறார்கள். அநேகமாக அவைகள் பிழைகள் இல்லாமலே வெளியாகின்றன. எழுதப்படும் வியாசங்கள் கலாசாலை அங்கத்தினரால் பார்க்கப்பட்ட பின்னரே அச்சிடப் பெறுகின்றன. ஆசிரம புஸ்தக சாலை ஸம்ஸ்கிருதம் வங்காளி இங்கிலீஷ் பாஷைப் புஸ்தகங்களாலேயே நிரம்பியிருக்கிறது. யாத்திரையையும், வீரத்தையும் பற்றிய புஸ்தகங்களையே மாணவர்கள் மிகுதியும் விரும்புகிறார்கள்.

இந்த ஆசிரமம் கவர்ன்மெண்டாரது அங்கீகாரத்தைப் பெறவில்லையாதலால், அவர்களது உதவியை எதிர்பாராமலே நடத்தப் பெறுகிறது. கலாசாலைச் செலவுக்குத் தேவையான வருவாய்கள் நான்கு வகையாயிருக்கின்றன. அவை:— (1) சாந்திநிகேதன மூலதனத்தின் வட்டிவரும்படிகள். இதுவே முக்கிய ஆதாரமாக இருக்கிறது. (2) ஸர் ரவீந்திரநாத் தாகோர் அவர்கள் எழுதியுள்ள புஸ்தகங்களின் விற்று வரவுகள். (3) மாணவர்களின் சம்பளங்கள். (4) நமது தாகோர் அவர்களின் நோபல் வெகுமதியின் வட்டி. இவைகளெல்லாம் கூடி ஆசிரமச் செலவுக்குப் போதாதிருப்பின் தாகூர் அவர்கள் கவனித்துக்கொள்ளுகிறார்கள்.

மாணவர்கள் பெரும்பாலும் எல்லாக்காலங்களிலும் உபாத்தியாயருடன்கூடிக்கொண்டேயிருப்பார்கள். மாணவர்களின் படிக்கைமுறைகளைப் பற்றிக் கவனிக்கும்படி உபாத்தியாயர்களே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். உபாத்தியாயர்களும் மாணவர்களும் அருளும் அன்பும் கூடினவர்களாக இருப்பதனால், அந்தக் கூட்டுறவு சுககரமாகவும் ஆனந்தகரமாகவும் இருக்கிறது. மாணவர்களும் தங்கள் வீட்டு வாசத்தைவிட இதனையே விரும்புகிறார்கள். சிற்சில காலங்களில் வயது கூடிய மாணவர்கள் வெளிச்சென்று அயல் கிராமங்களுக்குள் நுழைந்து, அங்குள்ள வாலிபர்களுக்குத் தேசாபிமானத்தைப் போதித்து வருவதுமுண்டு. மாணவர்களுக்குப் பரோபகார குணமும் தேசாபிமானமும் சிறுபோதிலிருந்தே போதிக்கப்படுகின்றன.

பாபு ஸந்தோஷ முஸும்தாரது மேற் பார்வையில் ஒரு தினசரிக் குறிப்புப் புஸ்தகமும் ஆசிரமத்தில் இருக்கிறது. சுத்தமான பால் கொண்டுவந்து கொடுக்கப்படுகிறது; அதிகம் வேண்டுமானாலும் தருவிக்கப்படுகிறது. ஆசிரமத்துஉபயோகத்துக்காகவே ஒருவைத்தியசாலையும் நடத்தப்பட்டுவருகிறது. சுரம், சீதபேதி, பேதி இவைகள் சில சமயங்களில் இருப்பதுண்டு. ஆனால், தினசரிக்குறிப்பில் (வைத்தியம்) நால்வர் அல்லது ஐவர்தாம் குறிக்கப்படுகிறார்கள். அதனாலேயே ஆசிரமம் சௌக்கிய நிலையில் இருக்கிறதென்பது ஊகிக்கப்படலாகும். மாணவர்களின் சௌகரியத்திற்காக ஆசிரமத்தையொட்டி ஒரு தந்தித் தபாலாபீஸும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.—இது வித்தியாபாநுவினின்று சுருக்கி எழுதப்பட்டது.

ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய
துப்பறியும் தமிழ் நாவல்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாத சுந்தரம் | ... | ... | 1 | 0 | 0 |
| புஷ்பவனம் | ... | ... | 0 | 10 | 0 |
| கருணாகரன் | ... | ... | 0 | 4 | 0 |
| ஸர்தார்ஸிங் | ... | ... | 0 | 3 | 0 |

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர்.
(தென்னிந்தியா)

V. N. SAMA RAO & Co., VELLORE (S. India.)

# India's Prayer. *

BY DR. SIR RABINDRANATH TAGORE.

## இந்தியாவின் பிரார்த்தனை.

### பிரார்த்தனைப்பத்து.

I.

வாழ்க வென்று வாழ்த்தி யெங்கட்கு
வாழ்வுதந் தருளினை
வாழ்கவே நாங்களும் வாழ்வை யோம்புவம்
தாழ்வுவா ராமலே
வாழ்வின் மகிமைதா னெப்படியெப்படி யுன்றன்
மகிமையு மாதலால்
வாழ்வில் தாழ்வ வாச்செயு மெதையுமுன்
னருளினாற் றகைப்போமே!

II.

நின்னருள் பெறவன்றி வேறொரு பொருள்பற்றி
யுள்ளம்பணி யவகேடு
நின்னருள் பெறவழி யாதழியு மென்றறிந்
துனையே பணிகுவோம்!
நின்னருட் பணியின்றி வேறொன்று பற்றியே
யுள்வலி குறை வுறினுடனே
நின்னருட் பேறிலாப் பொய்ம்மை வந்தணுகியெம்
முயிரையே வெளவுமால்—

III.

எம்முள நிறைந்துனைப் பிரார்த்தனை செய்வமிவ்
வரந்தர நினைப்போற்றியே:—
எம்முளஞ் சுவர்காம வின்பநுக ராசையை
யெதிர்த்துத் தகைக்க வலியருளுவாய்!
எம்முளஞ் சோர்வுறச் செய்துன்ப முன்னருள் [வெளிகாயத்
தாக்கியே நீக்கியருள்வாய்!
எம்முள முன்னருள் வலியினா லுன்னன்பி
லீடுபட் டுன்பணி செய்கவே!

IV.

பின்னுமுள மற்றெலாம் போராடி யழிவுற்று
மண்ணுகிரை யாகையிலும்
துன்னுமுன் னருளையே நம்பிவள ருயரன்பி
லீடுபட்டிருந் துய்யுவாம்!
பின்னுமுள பேர்களுன் பேர்சொல்லிப் பாதித் [துச்
சுயநயஞ் சாதித்தழிவரால்
மன்னுமொரு பசிகாரங்கொண்டு மன்னுயிர் [வதைப்போரை
யுன்கோபத் தீத்தகிக்குமால்—

Thou hast given us to live
Let us uphold this honour with all our strength and will.
For Thy glory rests upon the glory that we are.
Therefore in Thy name we oppose the power that would plant its banner upon our soul.
Let us know that Thy light grows dim in the heart that bears its insult of bondage,
That the life, when it becomes feeble, timidly yields Thy Throne to untruth,
For weakness is the traitor who betrays our soul.
Let this be our prayer to Thee—
Give us power to resist pleasure where it enslaves us,
To lift our sorrow up to Thee as the summer holds its midday sun;

---

* சென்ற டிஸெம்பர்மாதம் கல்கத்தாவிற் கூடிய 32-வது காங்கிரஸ் மகா ஸபையின் முன், ஆசியாவின் கவிச் சக்கரவர்த்தியாகிய ஸர் ரவீந்திரநாத் தாகோர் அவர்கள் "இந்தியாவின் பிரார்த்தனை" யென்று ஆங்கிலத்தில் வாகவி யொன்று பாடி அதை வாசித்தார். அது எல்லோராலும் மிகவும் மேன்மையானதென்று கொண்டாடப்பட்டது. அதன் கருத்தைப் பிரார்த்தனைப் பத்தாக தமிழ்ப்படுத்தி "விவேக சிந்தாமணி" யின் ஆசிரியர் தமது பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார். அதை அப்படியே இங்குப் பிரசுரிக்கிறோம். இதற்காக அவ்வாசிரியருக்கு எமது மனமார்ந்த வந்தனத்தை யளிக்கிறோம்.

V.

உறுதியிலே தானறிந் துண்மைவழி மிக் [கோராய்
வருவன வருகவென்
றுறுதிகொண் டுண்மைக்கு நன்மைக்கு நயமுடன்
நித்தியமாந் தன்மைக்கு
மிறுதிவரை யிசைந்துநின் றவமொன்றி வரு [மூன்றன்
ஸாம்ராஜ்ய சித்திபெறவும்
அறுதியி லாத்மசுக மளிக்குமொரு ஸ்வதந்திரப்
பேறுபெற வேண்டினேமாய்,—

VI.

கதிபெற நினைத்துஜக யாத்திரை துவக்கினேம்
தலைவரீ சரணமென்றே
விதிவலி புயலெனக் கிளம்பியச் சுறுத்தவும்
தீயனவே செய்யும் அலை
கதிசேர வொட்டாது போல்மோதி யார்ப்பரி [க்கவு
மிளைக்காது களைக்காது
மதிவலியோ டிதுவலி பெரிதெனவே கதிபெற [யாம்
வலித்தோட்டி வழியேகினோம்.

VII.

வழியிலே யாபத்து வலிபெற்று வதைதனுமச்சம்
மிச்சமாய் நின்றெமை
வழிமறித்துக் கொண்டதன் வருத்தத்தைக் [கொடுக்கவே
காத்துக்கொண் டிருக்குதையே!
பழிவாங்கு புயல்மத்தி தனிலுறை சத்தம்வாய்
கொண்டுரை பேசுமாபோல்
இழிவின்றி பேயச்சந் தவிர்ப்பான்போ லடியக் [குரல்கொண்
டெமைமுந்த வழைக்கையிலே,

VIII.

உடனுற்று வாராமல் தயங்கித் தவிப்போர்க்குத்
தாணியில்நாம் தங்கிநிற்கலாமோ!
உடனுற்ற காலத்தை யச்சம்லஜ்ஜை பற்ற [விட்டுகா
மவமே கழிக்கலாமோ]
திடனுற்றுத் தெய்வசங் கல்பமே நாங்கொண்ட
சங்கல்ப மெனத்தேறியே
உடனுற்ற தலைப்பாரம் தெய்வசங் கல்பத்தா
லுண்டாா மெனவகித்தே—

IX.

இறப்பது மிருப்பதுமுன்னருள் வெளியிலல்லால்
வேறிலையென் றுறுதிகொண்டு
துறப்பது வெறுப்பது முன்னருள் வெளி [கண்டோர்க்
கிலையென மனத்தேறியே
மறப்புட னினைப்புக்காளாகுஞ் சிற்றுயிர் பற்றி [நிற்பார்
சீர்பெறச் செய்நயநாட லின்றிச்
சிறப்பது தானில்லாத் தன்மைபூண் டொழுகு [வார்
நயபயம் நாடாமலே—

---

Make us strong that our worship may flower in love and bear fruit in work;
Make us strong that we may not insult the weak and the fallen,
That we may hold our love high where all things around us are wooing the dust.
They fight and kill for self-love, giving it Thy name,
They fight for hunger that thrives on brother's flesh,
They fight against Thy anger and die.
But let us stand firm and suffer with strength
For the true, for the good, for the eternal in Man,
For Thy Kigdom which is the union of hearts,
For the freedom which his of the Soul.
Our voyage is begun, Captain,
We bow too Thee!
The storm howls and the waves are wicked and wild,
But we sail on.
The menace of danger waits in the way.
To yield to Thee its offerings of pain,
And a voice in the heart of the tempest cries,
Come to conquer fear!
Let us not linger to look back for the laggards,

X.

"அன்றே யென்றன் ஆவியும் பொருளு
முடைமை யெல்லாமுங்
"குன்றே யனையாய்! என்னையாட் கொண்ட
போதே கொண்டிலையோ!

"இன்றோ ரிடையூ றெனக்குண்டோ!" வென்னார்
வழிபற்றி யாம்நடப்போம்!
"நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ விதற்கு நாயகமே!"

Or benumb the quickening hours with dread and doubt,

For thy time is our time and Thy burden is our own, and life and death are but Thy breath playing upon the eternal sea of life.

Let us not wear our hearts away in picking small help and taking slow count of friends,

Let us know more than all else that Thou art with us and we are Thine for ever.

SIR RABINDRANATH TAGORE.

## Sweet Potato.

## சர்க்கரை வள்ளிக்கிழங்கு.

இது கிழங்கு வர்க்கத்தைச் சேர்ந்தது. ஜனங்கள் சாதாரணமாக இதைக் கறிகாய்க்கு உபயோகப்படுத்துகிறார்கள். இதில் இரண்டு வகைகள் உள்ளன: ஒன்று சிவப்புக் கிழங்கு, மற்றொன்று வெள்ளைக் கிழங்கு. இவற்றில் வெள்ளை தினுசில்தான் மாசூல் அதிகம் கிடைக்கும். சிவப்பில் மாசூல் குறைவானாலும் கிழங்கானது சர்க்கரையைப்போல் மிகவும் இனிமையாயிருக்கும்; கொடிகள் அதிகமாகப் படரும்.

### பூமி.

இந்தப் பயிரானது நல்ல வடிகால் வசதியுள்ள மணல் சம்பந்தமான பூமியில் நன்றாய் வளரும்; தோட்டக்கால் பூமிகளிலும் பயிர் செய்யலாம். மணற் பூமியில் இப்பயிரைச் சாகுபடி செய்வதாயிருந்தால் அதிகமான எருப்போடவேண்டும்.

### தகுந்த எருக்கள்.

இப்பயிருக்கு சாம்பல் எருவே முக்கியமானது. ஒரு ஏக்கருக்கு 30 வண்டிகளுக்குக் குறையாமல் எருப் போடவேண்டும். எருவுக்காக ஆட்டுக்கிடையும் மடக்கலாம். அவுரி முதலிய பசுந்தாள் உரம் இடுவதும் நன்று; இதற்கு பசுந்தாள் பயிரைச்சாகுபடி செய்து அதை அப்படியே அதில் உழுதுவிடலாம்.

### நிலத்தைப் பண்படுத்தல்.

பயிர் செய்யப்படும் பூமியை ஜூலை ஆகஸ்டு மாதங்களில் நன்றாய் பலதடவைகளிலும் ஆழ உழுது, மேடு பள்ளங்களை நிரவிப் புல்பூண்டுகளில்லாமல் சுத்தம் செய்யவேண்டும். பிறகு வேண்டியவளவு உரம் பாட்டு மறுசால் உழுது பாத்திகளாகக் கட்டவேண்டும்; அல்லது முகடுகள் போடுவதும் நல்லது. இதன் பிறகே கொடிகளை நடவேண்டும். பாத்திகள் கட்டுவதாயிருந்தால், 10 அடி நீளமும் 5 அடி அகலமும், முகடுகளாயிருந்தால், 10 அடி நீளம் வேண்டும். ஒன்றுக்கொன்று 23 அடி வித்தியாசத்தில் இருக்கவேண்டும். பாத்திகளில் சாகுபடி செய்வதைக்காட்டிலும் முகடுகளில் போடுவதுதான் உத்தமம்.

### நாற்றங்கால்.

மாசூல் எடுக்கும்போது நல்ல முதிர்ந்த கொடிகளை அறுத்து மூன்று கணுக்களுடைய பதியன்களாக நறுக்கிக் கொள்ளவேண்டும். பிறகு இவற்றை இரண்டு கணுக்கள் தரையிலும் ஒன்று மேலும் இருக்கும்படி நட்டுத் தண்ணீர் ஊற்றிவரவேண்டும். நாற்றங்காலானது எப்போதும் தண்ணீர்க்கு அருகிலேயேயிருப்பதுதான் நல்லது. இவ்விதம் நடப்பட்டவை செழுமை

யாக வளர்ந்து பரவிக்கொண்டிருக்கும். இவைகளிலிருந்துதான் பதியன்கள் நறுக்கப்பட்டு ஏற்கெனவே, தயார் செய்யப்பட்டிருக்கும் பூமியில் நடப்படவேண்டும்.

### விதைப்பு.

ஏக்கருக்கு 15,000 முதல் 20,000 பதியன்கள்வரை நடப் போதுமானது. பாத்திகளில் நடப்படும் பதியன்களின் வரிசைகளுக்கு இடையே 1½ அடி தூரம் இருக்கவேண்டும். ஒவ்வொரு பதியனுக்கும் மத்தியில் ஒரு அடி தூரம் வித்தியாசம் இருக்கவேண்டும். முகடுகளிலும் ஒரு அடிக்கொன்றுதான் நடப்படுகின்றது. 12 அடி நீளமும் 6 அடி அகலமுமுள்ள ஒரு பாத்தியில் சுமார் நூறு பதியன்கள்வரை நடலாம்.

### களையெடுத்தல் முதலியன.

முகடுகளில் பாத்திகளுக்குப்போல் அவ்வளவு அதிகமாய்த் தண்ணீர் பாய்ச்சவேண்டியதில்லை. இவற்றில், சில சமயங்களில், அதிகமான தண்ணீர் பாய்ச்சலால் பயிர்களும் கெட்டுப்போவதில்லை. மழை இல்லாவிடில் வாரத்திற்கு ஒரு முறையாவது பயிருக்குத் தண்ணீர் பாய்ச்சவேண்டும். பயிர் பூமியில் நன்கு வளரும்வரை களைகளைப் பரவவொட்டாமல் அவ்வப்போது சுத்தம் செய்யவேண்டும். பயிர் படர ஆரம்பிக்கும்போது அதன் கொடிகளை அடிக்கடி தூக்கிவிட்டு, கண்ட விடங்களில் வேர் ஊன்றாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். இல்லாவிடில், பாசனத்தினால் ஒவ்வொரு கணுவிலும் வேர் ஊன்றிக் கிழங்கு சிறுத்துப்போகும்

### அறுவடை.

இப்பயிரானது நாலைந்து மாதங்களில் பலன் தரக்கூடியது. பயிரிலிருந்து இலைகள் பழுத்து உதிர்ந்தாலும், கணுக்களிடத்தில் கெட்டியாக நார் இருந்தாலும், கிழங்கை வெட்டிக் கத்தியால் அறுத்து, அது கறுப்பு நிறம் அடையாமலிருந்தாலும் பயிர் முற்றிவிட்டதென்று அறிந்துகொள்ளலாம். கொடிகளில் அடுத்த நாற்றங்கால் பயிருக்குத் தேவையான பதியன்களைத் தயார் செய்துகொண்டு மீதியானவற்றைக் கால்நடைகளுக்கு ஆகாரமாக உபயோகிக்கலாம். கிழங்குகளை மண்வெட்டியால் வெட்டி எடுக்கவேண்டும். ஏக்கர் 1க்குச் சுமார் ரூ. 200 முதல் ரூ. 300 மதிப்புள்ள கிழங்குகள் கிடைக்கலாம்.

---

## The Late Sir William Wedderburn.

## காலஞ்சென்ற ஸர் வில்லியம் வெட்டர்பர்ன்.

இந்தியரின் மேன்மைக்காகப் பலதுறைகளிலும் சலியாது உழைத்துவந்த ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் காலகதியடைந்துவிட்டாரென்பதைக் கேட்க நாம் மிகவும் வியசனிக்கிறோம். அவர் அதிகாரப்பதவியில் இருந்தபோது இந்தியர்களுக்கு எந்தெந்த வழிகளில் நன்மை செய்யக்கூடுமோ, அவற்றையெல்லாம் மிகச்சிரத்தையுடன் செய்துவந்தார். 1885-ம் வருஷத்தில் காங்கிரஸ் மகா சபையைக் கூட்டிவைக்க உழைத்தவர்களுள் அவர் ஒருவராக விளங்கினார். கடைசியாக, 1887-ம் வருஷத்தில் தமது உத்தியோகத்திலிருந்து நீங்கி இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கும் இதுகால பரியந்தம் இந்தியாவின் முற்போக்குக்கென்றே அல்லும் பகலும் மெய்வருத்தம் பாராமல் உழைத்துவந்த அவருக்கு நாம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் ஸ்காட்லாந்திலுள்ள எடின்பரோவென்னும் நகரில் 1838-ம் வருஷம் மார்ச்சுமாதம் 25ந்தேதி ஜனனமானார். அவருடைய வம்சத்தினர் பல நூற்றாண்டுகளாக ராஜசேவையிலேயே சிறந்து விளங்கியவர்கள். அவரது முன்னோர்கள் நமது இராஜாங்கத்தில் பற்பல உத்தியோகங்களை வகித்துள்ளார்கள். எவ்வாறெனில்: அவருடைய தந்தை பம்பாய் ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகத்தில் 1807-ம்

வருஷம் அமர்ந்து 30 வருஷகாலம் வரை வேலைபார்த்து வந்தார். அவரது தமையனார் 1841-ம் வருஷத்தில் கல்கத்தா ஸிவில் ஸர்விஸ் உத்தியோகத்தில் அமர்ந்து தாம் இறக்குமளவும் வேலைபார்த்து வந்தார். நமது வெட்டர்பர்னும் அதே உத்தியோகத்தில் அமர்ந்து 1860-ம் வருஷம் முதல் 1887-ம் வருஷம்வரை வேலையைப் பார்த்து வந்தார். ஆதலால், இந்தியாவுக்கும் வெட்டர்பர்னது வம்சத்தினருக்கும் ஒரு நூற்றாண்டுக்கு முன்னிருந்தே சம்பந்தமிருந்து வந்திருக்கின்றதென்பது நன்கு புலப்படுகிறது. இந்தியரின் உண்மையான கோரிக்கைகளையும் ஆவல்களையும் நன்கு உணர்ந்த வில்லியம், "சென்ற இருபத்தைந்து வருஷகாலமாய் நான் உங்களுடைய உப்பைத் தின்றிருக்கிறேன். நான் உயிரோடு இருக்கும்வரை உங்களுக்கு என்னால் கூடிய ஊழியத்தைச் செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்று சொல்லியிருப்பது அவருடைய உதார குணத்தையும் பெருந்தன்மையையும் வெளிப்படையாகக் காட்டுகின்றதல்லவா?

ஸர் வில்லியம் ராஜசேவையிலிருந்தபோது பற்பல பதவிகளை வகித்துவந்தார். அவர் கவர்ன்மெண்டின் உதவிக் காரியதரிசியாய் முதலில் இருந்தார்; பிறகு ஹைகோர்ட்டு ரெஜிஸ்ட்ரார் என்ற பதவியிலும், அதன்பிறகு விந்தியப் பிரதேசத்தின் தலைமை அதிகாரப் பதவியிலும் இருந்தார்; ஹைகோர்ட்டு ஜட்ஜி பதவியையும் வகித்து வந்தார். அவர் 1887-ம் வருஷத்தில் ராஜாங்க சேவையிலிருந்து விலகிக்கொண்டபோது, கவர்ன்மெண்டார் அவரது ஊழியத்தை மெச்சி, இந்தியர்களின் நிலைமையை உயர்த்துவதற்கு அவர் அதிக ஆவலுள்ளவராயிருந்தாரெனக் குறிப்பிட்டுள்ளார்கள். இந்தியமக்களும் அவரது ஊழியத்தை மதிப்பதற்கு அறிகுறியாக அவருக்கு ஒரு பணமுடிப்பைக் கொடுத்தார்கள். ஆனால், அவர் அதைத் தமது நன்மைக்கு உபயோகப்படுத்திக்கொள்ளாமல், பம்பாய் இராஜதானிச்சங்கத்திற்காக அதன் பெரும்பாகத்தைக் கொடுத்துவிட்டார். இந்தியர்களிடத்தில் அவருக்கு எவ்வளவு அபிமானமுள்ளதென்பதை, அவர் தமது சொந்தப்பணத்திலிருந்து சுமார் ஒரு லட்சம் ரூபாய்வரை இந்தியரின்பொருட்டுச் செலவழித்திருப்பதிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

இந்திய தேசீய சபைகளின் விஷயமாய் அவர் செய்திருக்கும் ஊழியம் கொஞ்சமன்று. காங்கிரஸ் மகா சபை ஏற்பட்ட 1885-ம் வருஷம் முதற்கொண்டு அவர் அதில் உழைத்துவந்திருக்கிறார். ஸர் வில்லியம் தமது உத்தியோகத்திலிருந்து விலகி இங்கிலாந்திற்குச் சென்று விட்டிருந்தாலும், 1889-ம் வருஷம் காங்கிரஸ் மகா சபையில் அக்கிராசனம் வகிக்க இந்தியாவிற்கு விஜயம் செய்தார். இதன் பிறகு 1903-ம் வருஷத்தில் ஸர் காட்டன் அக்கிராசனம் வகித்தபோதும், அவருடன் ஸர் வில்லியமும் இரண்டாவது தடவையாக இந்தியாவுக்கு விஜயஞ்செய்தார். இன்னும், இங்கிலாந்திலுள்ள காங்கிரஸ் கமிட்டிக்கு நெடுங்காலம் தலைவராகவும், அங்கு இந்தியாவின் விஷயமாய்ப் பிரசார வேலையை மேற்கொண்டவராகவும், பார்லிமெண்டிலும் இன்னும் மற்ற இடங்களிலும் இந்திய விஷயங்கள் நன்கு கவனிக்கப்படுவதற்கு மூலபுருஷராகவுமிருந்தவரான ஸர் வில்லியம் வெட்டர்பர்னைவிட மேலான உத்தமரை நாம் இனி காண்பதரிது.

---


## புதிதாய் வந்த புஸ்தகங்கள்.

அமிர்சிங் — 0 12 0
ஓர் இனிய தமிழ் நாவல் எஸ். எ. இராமசாமி ஐயர் எழுதியது.

ஞானசுந்தரம் — 0 8 0
மாயவரம் வக்கீல் அ. நடேசபிள்ளை அவர்கள் எழுதியது; ஓர் இனிய தமிழ் நாவல்.

வனஜாக்ஷி — 0 8 0
ஓர் ஜனசாதத்தமிழ் நாடகம்; வரகவி-திரு. அ. சுபபிரமணிய பாரதியார் எழுதியது.

கள்வர் கவர்ந்த கலியாணப்பெண் — 0 6 0
எம். எஸ். கிருஷ்ணசாமி ஐயர் எழுதியது.

குணசீலன் — 0 10 0
வி. எ. கோபாலகிருஷ்ண ஐயர் இயற்றிய ஓர் இனிய தமிழ் நாடகம்.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
வேலூர். (தென்னிந்தியா.)

# Evil effects of Overeating.

BY PANDIT P. K. SREENIVASACHARIAR.

## அமிதமாக உண்ணுதலின் கேடுதிகள்.

“பீதூண் விரும்பேல்” என்பது, அன்னையென்னத்தக்க ஔவையாரின் அருளிச் செயலாகிய ஆத்திசூடியில் உள்ள ஓர் அமுதமொழி. அமிதமாக உண்ணுதலை விரும்பாதே யென்பது இதன் பொருள்: அளவறிந்து உண் என்பது கருத்து.

நோயற்று நீடித்து உயிர்வாழ விரும்புகிறவர்கள் அளவு கடந்து உண்ணுவதைவிடவேண்டும். அதிசமாகத்தின்று நோயை வருவித்துக் கொள்வானேன்? வைத்தியனையும் மருந்தையும் தேடுவானேன்? ஒவ்வொருவர்க்கும் இவ்வளவு ஆஹாரம் உட்கொண்டால் ஜீர்ணமாகுமென்பதனை அறிந்துகொள்ளத்தக்க அறிவு இருக்கவும், ஏன் அதிசமாக உண்டு சிரமப்படவேண்டும்? சிலர் அஹோராத்திரம் உண்டே கழிக்கின்றனர். நல்லன இயற்றி நற்பேறுகளைப் பெறுதற்பொருட்டு இனிது உயிர் வாழ்ந்திருப்பதற்காக உண்ணுகின்றோமேயன்றி, இடைவிடாது உண்ணுதற்காகவா உயிர் வாழ்கின்றோம்? அரைக்கும் இயந்திரம்போலச் சிலர் வாய் ஓயாது அசையத் தின்றுகொண்டேயிருப்பதனால், “அவிழ்ச்சுவையே யறிந்து அரனடிபரவுந், தமிழ்ச்சுவை யறியாத் தம்பங்க” ளாயிருக்கின்றனர். இத்தகையோர் கல்வி, கேள்வி, தானம், தியானம், தவம் முதலிய இன்பங்களை அறியாமல் வாணாளை வீணாளாகப் போக்கிவிடுகின்றனர்; அன்றியும் இனிது உலாவவும், உத்ஸாஹத்துடன் நலம் பெறுந் தொழில்களைச் செய்யவும், நுண்ணறிவுடன் நுணுக்கங்களை அறியவும் திறமற்று, விகாரமாய் அருவருக்கத் தக்க ஸ்தூலதேகமும் மந்தமதியும் பொருந்தி அவமதிப்புக்கு இலக்காகின்றனர்.

சுறுசுறுப்பு வாய்ந்த லக்ஷணமுள்ள பெண்மையாய்ப் பலம் பொருந்திய தேகம் படைத்திருப்பது ஓர் சிறப்பு. லக்ஷணமுள்ள மென்மையான வலிய உடம்பு அளவறிந்துண்பவர்க்குத்தான் உண்டு. இயற்கையில் பலஹீனத்தன்மை பொருந்தியவர்கள் மகளிர். முக்கியமாக அவர்கள் அளவுகடந்து உண்ணலாகாது. “உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு” என்று மற்றோரிடத்தில் நம் அன்னை உரைத்தருளியமை கவனிக்கத்தக்கது. அதிகமாக உண்டால் அங்ஙனம் உண்பவர், ஆண்மக்களேயாயினும், பெண்மக்களேயாயினும் காண்பதற்கினிய அழகிய தோற்றம் பெறுதொழிகின்றனர். காண்பவரைக் குணத்தாலும் தோற்றத்தாலும் நலமுறக் கவர்ந்துகொண்டு சீர் பெறச்செய்தல் மக்கள் கடமை யென்க.

சிலர் சமயமென்பதின்றித் தீனி கிடைத்தாற் போதும்; உடனே மிதமின்றித் தின்று விடுகிறார்கள். சிலர் அதிகமாகத் தின்றுவிட்டு, இப்புறம் அப்புறம் அசையக்கூட முடியாமல், இரையை அளவின்றி விழுங்கிவிட்டுச் செத்தாற்போலக் கிடக்கும் மலைப்பாம்புபோல மயங்கிக் கிடக்கிறார்கள். சிலர் அமிதமாக உண்டவை சீர்ணித்தற்காகப் புரளுகிறார்கள். சிலர் உணவு சும்மா கிடைத்தால் வரம்பின்றிப் புசித்து, பேதி முதலிய தேக பீடைகளோடு தவிக்கின்றனர். அதிகத் தின்றியில் சிலர் மரணமும் அடைகின்றார்கள். மிதமிஞ்சி அன்னம் புசிப்போரிடத்தில் மூதேவி வாழ்வதாகப் பழைய நூல்களில் சொல்லப்பட்டுள்ளது. கூடியவரையில் சமாராதனைகளிலும் நிமந்தாணத்திலும் அந்தணராதியோர் அதிகம் உண்ணுதற்குச் சந்தர்ப்பம் நேர்ந்தாலும், அளவறிந்து புசிக்கவேண்டும். இரைப்பை மிக மென்மையானது; மிதமின்றி உண்டால் அது விண்டு விரிந்து சீர்கெட்டுப் போகும் என்று அறியாதபேதை மாக்களும் உளர். உணவைச்சீர்ணம் செய்விக்கவேண்டிய மெல்லிய உறுப்புக்கள் அதிக வேலை செய்யும்படி நேர்ந்தால், பிராணஹானி விரைவில் விளையும்

வாய்க்குச் சுவையாயிருக்கிறதென்று அளவு கடந்து தீனிதின்றும் ஜனங்கள், வயிறு சுரைக் குடுக்கைபோல விகாரமாய்ப் பருத்துத்தோன்றக் குண்டோதரர்களாய் இருக்கின்றனர்.

அறுசுவைகளில் எதுவும் மிதமிஞ்சி இருக்கக்கூடாது; அதனை மிதமிஞ்சி உண்ணலுமாகாது. முக்கியமாக நெய்யும் தித்திப்பும் மிகுந்த உணவுகளை அளவு கடந்து உண்பவர் விரைவில் நோய்க்குள்ளாகின்றனர். காப்பி தேயிலை என்னுமிவற்றின் பானங்களை மிதமிஞ்சி அருந்தலாகாது; அன்றியும், அவற்றில் தித்திப்பை மிதங்கடந்து இட்டுக் குடித்தலும் ஆகாது. சில இனத்தார் ஒருநாளைக்கு ஆறுதரம் எட்டுத்தரம் உண்ணுகிறார்களென்று கேள்வி. இந்தச் சாப்பாட்டிராமர்கள் அரிய பெரிய இம்மை மறுமைக்கான நற்காரியங்களைச் செய்தல் ஒருபோதுமின்று. சில வகுப்பார் தீனிக்காகவே அதிகப்பணஞ் செலவிட்டுத் தம்பொருளிழந்து வறியவர்களாகி, முன் நன்றாகத் நின்ற வழக்கத்தால் அத்தீனியை விடமாட்டாமல் கையிற் பொருளின்மையாற் கடன் வாங்கிவாங்கி அக்கடனென்னும் கடலில் ஆழ்ந்து கரைகாணாது பெருந்துயருறுகின்றனர். கல்வி, கேள்வி, பரோபகாரம் முதலியவற்றினால் ஒருவன் உண்மையான இன்பம் பெறலாமேயன்றி, உண்ணுவதனால் உண்மையான இன்பம் பெறுதலென்பது உண்டோ? இதனையே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார்,

"செவிக் குணவில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப்படும்" என்றார்.

அங்கு, பரிமேலழகரென்னும் அதன் உரையாசிரியர், கேள்வி சுவை மிகுத்தலும், பின்னை பயன் தருவதுமாதலால் அத்தகைய கேள்வி உள்ளபொழுது உணவு வெறுக்கப்படுதலால் 'இல்லாத போழ்து' என்றும், உணவு பெரிதானால் தேடுதல் துன்பத்தோடு நோயும் காமமும் அதிகமாதலால் 'சிறிது' என்றும், அப்படி சிறிது உண்ணுவதுதான் எதற்காகவென்றால் பின் உயிர் வாழ்ந்திருந்து நூற்பொருள்களைக் கேட்டற்பொருட்டாதலால், 'ஈயப்படும்' என்றும் நாயனார் கூறியதாகக் காட்டினார்; அன்றியும், வயிற்றின் இழிவு தோன்ற 'ஈயப்படும்' என்று இழிவு குறிக்கும் ஈ என்னும் வினையை வைத்தாரென்றும் உரைத்தார்.

கல்விகேள்விகளாகிய நல்லுணவையுடையோரன்றி மற்றைய உணவை வரம்பின்றி உண்போர் அறிவால் நிறைந்த சான்றோராகார். மிதமாக உண்பவர் துன்பங் காணாமல் இன்பத்தையே அறிவாராதலால், அவர்களைத் தேவர்களென்றும் கூறலாம். காதால் நுகரப்படும் குணமும் அலங்காரமுமாகிய சொற்சுவையையும், சிங்காரம், நகை, கருணை, வீரம், உருத்திரம், அச்சம், இழிப்பு, வியப்பு, சாந்தம் என்னும் பொருட்சுவையையும் உணராமல், வாயால் நுகரப்படும் அறுசுவைகளையே மிகுதியாக உடைய ஜனங்கள் செத்தால் நஷ்டமும் வாழ்ந்தால் லாபமும் இல்லையென்னுங் கருத்துத் தோன்றத் திருவள்ளுவநாயனார்,

"செவியிற்சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினுமென்" னென்றார்.

மனமும் மொழியும் மெய்யும் செய்யும் தொழில்கள் மிகுந்தால் பிணி வருவதுபோலவே, உணவு மிகுதலாலும் பிணி உண்டாமென்பதை நாயனார் 'மருந்து' என்னும் அதிகாரத்தில் நன்றாகக் கூறினார். அச்செய்யுள்களாவன:—

"மிகினும் குறையினும் நோய் செய்யும்; நூலோர்
வளி முதலா வெண்ணிய மூன்று.

(இதன் பொருள்): உணவும் மனமொழி மெய்களின் செயல்களும் ஒருவனது பகுதிக்கு ஒத்த அளவாக அல்லாமல் அதில் மிகுந்தாலும் குறைந்தாலும், ஆயுர்வேதமுடையவர்களால் வாதம், பித்தம், சிலேஷ்மம் என்னப்படும் மூன்று நோயும் அவனுக்குத் துன்பஞ் செய்யும் (என்பதாம்.)

"மருந்தெனவேண்டாவாம் யாக்கைக்கு; அருந்தியது
அற்றது போற்றியுணின்."

(இதன்பொருள்): ஒருவன் முன்னே உண்டது ஜீர்ணமாய் அற்ற விதத்தை, தேகம் இலேசாயிருப்பது, பரிசுத்தம், அவயவங்கள் வேலைகள் செய்வதற்கு உரியவையாதல், பசி மிகுதல் முதலிய அடையாளங்களாலே தெளிவாக

அறிந்துகொண்டு, பிறகு உண்ணுவானானால், அவன் தேகத்துக்கு மருந்தென்று வேறு வேண்டாவாம். (என்பதாம்.)

"அற்றால் அளவறிந்துண்க ; அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்குமாறு".

(இதன் பொருள்): கோடானுகோடியாகிய மற்ற தேசங்களில் தப்பிப் பெறுவதற்கருமையான இந்த மானிட தேகத்தைப் பெற்றால், அதை நெடுங்காலங்கொண்டு செலுத்துவதற்கு வழி அது ஆகையினால், முன்னே உண்டது சீர்ணித்துத் தீர்ந்தால், பின்பு உண்பதைச் சீர்ணித்துத் திருமளவை அறிந்து அவ்வளவாகவே உண்ணவேண்டும் (என்பதாம்.)

இம்மை மறுமை வீடு பேறுகளை அடையக் கூடியது இத்தேகமொன்றேயாதலால், இது பெறுவது அரிது என்பது தோன்ற, 'உடம்பு பெற்றான்' என்றும், இத்தேகம் நீடித்து நின்றால் அந்த இம்மை மறுமை வீடு பேறுகளை மிகுதியாகச் செய்து கொள்ளலாமாதலால், 'நெடிதுய்க்குமாறு' என்றுங் கூறியமை கவனிக்கத் தக்கது.

உண்டது அற்றாலும் அதன் பயனாகிய ரஸம் அறாது ; ஆதலால், அதுவும் அறவேண்டும். அதுவும் அற்ற விஷயம் மிகவும் பசியெடுத்தால் அறியப்படும். அப்போதுதான் உண்ணவேண்டும். அல்லாமலும் உண்பவன் தன்னது தேகவாசிக்கு உணவு மாறுபடக்கூடாது; காலவியல்போடு மாறுபடவுங்கூடாது; சுவை வீரியங்களினால் தமக்குள் மாறுபடாமலும் இருக்கவேண்டும். அவையாவன:—முறையே வாதம், பித்தம், சிலேஷ்மம் என்னும் இவற்றாலாகிய பகுதிக்குத் தகாதவற்றைச் செய்வனவாதலும், வெயிற்காலம் மழைக்காலம் முதலிய பெரும்பொழுதும், காலை நடுப்பகல் முதலிய சிறுபொழுதுகளும் என்னும் காலவேறுபாடுகளில் ஒன்றுக்கு ஆனவை மற்றொன்றிற்கு ஆகாமையும், தேனும் நெய்யும் தமக்குள் ஒத்து விஷமாவது போல்வனவுமாம். இவற்றையெல்லாம் கவனிக்காமல் மனம் கொண்டபடி தின்றால், அதனால் வியாதியும் அகாலமரணமும் வரும். இதனை, நாயனார்,

"அற்றதறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து."

என்னும் குறளில் காட்டினார்.

மற்றும்,

"மாறுபாடில்லாத வுண்டி மறுத்துண்ணின்,
ஊறு பாடில்லை யுயிர்க்கு"

என்றமை காண்க.

(இதன்பொருள்) : மேற்கூறிய மூவகை மாறுபாடுகளும் இல்லாத உணவை, தன் மனம் வேண்டிய அளவாலல்லாமல் நோய் வராத அளவினால் ஒருவன் உண்ணுவானானால், அவனுயிர்க்கு நோய்களால் துன்பம் உண்டாகாது (என்பதாம்.)

"இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேரிரையான்கண் நோய்."

(இதன் பொருள்.) : உண்டி சுருங்குதலை நல்லதென்று அறிந்து, அப்படியே உண்ணக்கூடிய அளவில் சிறிது குறைய உண்ணுமவனிடத்தில், வாதம் முதலியவை மூன்றும் தம்தம் நிலைமையில் வேறுபடாமையால் மனமும் மொழியும் தேகமும் அவன்வசத்தில் இருத்தலும், அதனால், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் அடைதலுமாகிய இன்பம் நிலைநிற்கும். அவ்வாறுபோல், மிகப் பெரிய இரையை விழுங்குபவனிடத்தில் நோய் நீங்காமல் நிலைநிற்கும். மீதூண் விரும்புமவன் இரையை அளவில்லாமல் எடுத்து அதனால் வருந்தும் மிருகத்தை ஒத்திருப்பதனால், இங்கே நாயனார், 'இரையான்' என்று உரைத்தது கவனிக்கத் தக்கது.

"தீயளவன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயளவின்றிப் படும்"

(இதன் பொருள்) : தன் பிரகிருதியையும் அதற்கு ஏற்ற உணவையும் காலத்தையும் ஆராயாமல் வேண்டிய ஒரு உணவை வேண்டிய ஒரு காலத்தில் வயிற்றுப்பசித் தீயளவல்லாமல் ஒருவன் மிகுதியாக உண்ணுவானானால் ; அவனிடத்தில் நோய்கள் எல்லையில்லாமல் வளரும். என்றிங்ஙனம் நாயனார் உரைத்தவை காண்க.

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.

# Ancient Stories of South India.

# தென்னிந்திய புராதன கதைகள்.

## ராத்திருடனும் பகல்திருடனும்

### அல்லது

### “திருடனிலும் திருடன் ஸாமாந்ய திருடனு!”

தாராபட்டணம் என்றொரு நகரம் உண்டு. அதில் ராத்திருடன் என்று ஒரு திருடனிருந்தான். அவனுக்கு ஒரு மனைவி உண்டு. அவள் பெயர் ஸுகுணவதி. திருடனென்றாலும் திருடன் அவன் லேசான திருடனல்லன். அஸஹாயசூரன். ஒன்று தெரிந்தது ஒன்று தெரியாதது என்பது அவனிடம் கிடையாது. அக்னிஸ்தம்பனம், ஜலஸ்தம்பனம், உச்சாடனம், மோஹனம், மாரணம் என்னும் பெரியபெரிய ஸமாசாரங்களெல்லாம் தெரிந்தவன். எப்பேர்ப்பட்ட ஸாமர்த்யவானாலும் அவனுக்கு ஈடாகமாட்டான். அவன் எத்தனையோ வீடுகளில் கன்னமிட்டுக் களவாடியிருக்கிறான். ஒரு ஸமயமாவது அவன் அதிகாரிகள்கையில் அகப்பட்டான் என்பது கிடையாது. அந்தப் பட்டணம், அந்த ப்ராந்த்யமுழுவதும் அவன் கன்னமிடாத பணக்காரன் வீடு ஒன்றுகூட இல்லை. அவன் வீட்டைப்பார்த்தால் மஹாராஜா அரண்மனை மாதிரித்தான் இருந்தது. அவ்வளவு வைபவம் அவனுக்கு உண்டானவிதம் இன்னதென்று ஒருவரும் அறியார். அவன் செய்யும் கணக்கற்ற தானதர்மங்களைப் பார்த்து எல்லோரும் ஆச்சர்யப்பட்டார்கள். அவனிடம் எப்போதும் பணத்துக்குக் குறைவில்லை. அதுஒன்று குறையில்லாவிட்டால் வேறென்ன குறையிருக்கிறது? ஸகல ஸம்பத்துக்களும் அவனிடம் நிறைந்திருந்தன. ஆனால் அவனுக்கு ஒரு குறைமாத்ரம் நீங்காக் குறையாயிருந்தது. அது ஆண்பெண் இருவர்களுக்கும் ஸதாஸர்வகாலமும் விசாரமாயிருந்தது. அது என்ன விசாரம்! ஒரே விசாரந்தான்; பிள்ளையில்லாத விசாரந்தான்; இப்படியே வெகு காலம் கழிந்தது; தெய்வம் கண்திறக்கவில்லை. இப்படியிருக்கையில் ஒருநாள் அவர்கள் வீட்டுக்கு ஒரு பைராகி வந்தான். ஸுகுணவதி உள்ளேயிருந்து அரிசியெடுத்துக்கொண்டுவந்தாள். அவளைப்பார்த்து அந்தப்பைராகி, “அம்மா, உனக்குநல்ல அதிர்ஷ்டம் உண்டாகப்போகிறது, கொஞ்சநாளைக்கெல்லாம் உனக்கு அதிவிவேகியான ஒரு பிள்ளை பிறக்கப்போகிறது. இந்தா, இந்த தாழ்த்தியைக் கட்டிக்கொள்” என்றான்.

அதைக்கேட்டவுடன் அவளுக்கு எவ்வளவோ ஸந்தோஷமுண்டாயிற்று. பைராகிக்கு உபசாரம் ஜாஸ்தியாகிவிட்டது. “எனக்குப் பிள்ளை மாத்திரம் பிறந்துவிட்டால் நீர் என்னவெல்லாம் செய்யச்சொல்லுகிறீர்களோ அதையெல்லாம் செய்கிறேன்.” என்று சொன்னாள். “உனக்குக் குழந்தைபிறந்த இருபத்தோராம் நாள் மறுபடியும் வருகிறேன்” என்று சொல்லிவிட்டுப் பைராகி போய்விட்டான்.

உடனே ஸுகுணவதி நடந்த விஷயங்களையெல்லாம் தன் புருஷனிடம் சொன்னாள். அவன் எல்லாவற்றையும் ‘உம்’ கொடுத்துக்கேட்டான், ஆனால் நம்பமாத்திரமில்லை. இருந்தாலும், பலன் உண்டானால் உண்டாகலாம், இல்லாவிட்டால் இல்லை, கெடுதிமாத்திரம் ஸம்பவிக்காது என்று தாழ்த்தியைக் கட்டிக்கொள்வதற்குத் தடை சொல்லவில்லை. இவ்வளவாவது பெரியமனது செய்தாரே என்றெண்ணி ஸந்தோஷமடைந்து அவள் பைராகி சொன்னவிதம் தாழ்த்திக்குப் பூஜைசெய்து நல்லமுகூர்த்தம் பார்த்து அதைக் கழுத்தில் கட்டிக்கொண்டாள். அது முதல் கொண்டு ப்ரதிதினமும் அவள் “பைராகிமோசக்காரனல்லன்; மாயக்காரனுமல்லன். அவன் என்னத்துக்காக மோசம் செய்யவேண்டும்? எனக்குப் பிள்ளைபிறக்கும் என்பதில் எள்ளளவேனும் ஸந்தேகமில்லை. அப்புறம் நான் என் சிங்காரக் குழந்தையையெடுத்துக்கொண்டு எனக்கு ஸரிஸமானமான ஸத்ரீகள் நடுவில் தலையெடுத்து நடக்கலாம். என் கண்மணிச்செல்வத்தைப்பொன் ஊஞ்சலிட்டுத் தாலாட்டுவேன். தங்கக்கிண்ணத்தில் சாதமெடுத்து மாடியில் நின்று சந்திரமா

பார்வைக் காட்டிக்கொண்டே என் சின்ன அப்பனுக்கு ஒவ்வொரு வாயாய் ஊட்டுவேன். என்ன ஆனந்தம்? உண்மையில் அந்த பாக்யம் எனக்குக் கிடைக்குமா? கிடைக்கும்! கிடைக்கும்!" என்று மனதுக்குள்ளேயே சொல்லிக்கொள்வாள்.

அவள் தாபஸும் வீண்போகவில்லை. இரண்டொரு மாதங்களுக்கெல்லாம் கர்ப்பந்தரித்தாள். இனி ஆனந்தத்துக்குக் கேட்பானேன்? ராத்திருடன் கூட பைராகியை ஸ்துதிக்கலானான். அந்த ஆனந்தத்தில் தம்பதிகள் கணக்கற்ற தானதர்மங்கள் செய்யலாயினர். அவர்கள் வீடு தர்மஸத்ரமாய்விட்டது. அநேக தெய்வங்களுக்கு அபிஷேகாதி உத்ஸவங்கள் சிறப்பாக நடத்தினார்கள். ஸகலவிதமான தர்மங்களையெல்லாம் சலிக்காமல் செய்துகொண்டேயிருந்தார்கள் பந்துக்களெல்லாம் விதவிதமான பக்ஷணங்கள் செய்துவந்து கர்ப்பஸ்திரீக்குக் கொடுக்கலாயினர். ஊராரெல்லோரும் அவர்களுடைய அதிர்ஷ்டத்தைக் கொண்டாடினார்கள். கணக்கற்று லக்ஷக்கணக்காய்க் குவிந்துகிடக்கும் த்ரவ்யத்துக்கு ஸரியான விநியோகம் ஏற்பட்டதென்று ஜனங்களெல்லாம் ஸந்தோஷித்தார்கள்.

இப்படியே ஒன்பதுமாதமும் பூர்த்தியாயிற்று. பத்தாம்மாதத்தில் ஒருநாள் நல்ல சுபமுகூர்த்தத்தில் ஸுகுணவதிக்கு ஓர் ஆண்பிள்ளை ஜனனமாயிற்று. ராத்திருடன் அத்யந்த ஸந்தோஷமுடையவனாய் அன்றையதினம் ஆயிரம் ஆயிரமாய்த் தானங்கள் செய்தான். புத்ரப்பேறு உண்டான காரணமாய் அவன் தேசம் புளகாங்கிதம் எய்தியது. குழந்தையைப் பார்த்துப்பார்த்து அவன் பொங்கிப்போனான். இவ்வாறாக இருபதுதினங்கள் கழிந்தன. இருபத்தோராம் நாள் உதயமாயிற்று. அன்றையதினம் ஸுகுணவதி "இன்றே பைராகி வருவதாகச் சொன்னார். அந்த மஹாத்மாவின் கடாக்ஷத்தால்தான் இந்தப் புத்ரஸம்பத்து உண்டாயிற்று. அவர் மஹாயோகி, திவ்யஞான ஸம்பன்னர், இன்றையதினம் தப்பாமல் வருவார். பக்திஸ்ரத்தையுடன் அவரை உபசரிக்கவேண்டும்" என்று அகத்து வேண்டிய ப்ரயத்தனங்களையெல்லாம் செய்யத்தொடங்கினாள்.

சுமார் ஜாமப்பொழுதுக்கு ஸாக்ஷாத்பரமசிவம்போல் ஜ்வலிக்கும் தேஜஸுடன் பைராகி வந்து ப்ரத்யக்ஷமானார். உடனே ஸுகுணவதி அவருடைய பாதங்களில் நமஸ்கரித்துத் தக்ஷணமே தன் சிங்காரக் குழந்தையைக் கொண்டுவந்து அவருடைய பாதங்களில் அமர்த்தினாள். பைராகியும் ஆசீர்வதித்துக் குழந்தையையெடுத்து தாயார்கையில்கொடுத்து 'அம்மா உன் பர்த்தாவைப் பார்க்கவேண்டும்' என்றார். ஸுகுணவதி தன் கணவனுக்குச் சொல்லியனுப்பினாள். அப்போது அவன் மாடியில் ஏதோ வேலையாயிருந்தான்; இந்த ஸங்கதியைக் கேட்டவுடன் 'எங்கே அந்த மஹாத்மா' வென்று ஓரே ஓட்டமாய் ஓடிவந்தான். 'நமக்குப் பிள்ளை பிக்ஷை கொடுத்த மஹாத்மா இவர்தான்' என்று ஸுகுணவதி பைராகியைக் காண்பித்தாள். உடனே ராத்திருடன் அவர்காலில் ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தான். பைராகி அவனுக்கு ஆசிகூறிப் பூமியினின்றும் எழுப்புவித்தார். அவரை மாடிக்கு அழைத்துப்போய் ஆஸனத்திலமர்த்திக் தம்பதிகளிருவரும் அவருடைய ஸந்நிதியில் வணங்கிநின்றனர்.

கொஞ்சங்கழித்து இராத்திருடன் ஒரு கட்டு நிறைய ரத்னாதி ஆபரணங்களைக் கொண்டுவந்து பைராகியை அங்கீகரித்துக்கொள்ளும்படி வேண்டினான். அவர் "எனக்கேன் இவையெல்லாம்? உன்பக்திக்காக மகிழ்ந்தேன்; எல்லாவற்றையும் உன் வீட்டிலேயே வைத்திரு" என்றுசொல்லி அவைகளைத் திருப்பியனுப்பிவிட்டார். ஸுகுணவதியும் ராத்திருடனும் என்னென்னவிதமாய் வேண்டிக்கொண்டாலும் பைராகி ஒரேபிடிவாதமாய் மாட்டேனென்றார். இவர்களும் அவரைப் ப்ரார்த்திப்பதைவிடவில்லை. கடைசியில் அவர் "நீங்கள் என்னிடம் இவ்வளவு பக்திவைத்திருப்பதால், வந்த ஏழைகளுக்கெல்லாம் இல்லையென்னாமல் வேண்டியமட்டும் அன்னமிடுங்கள்" என்றார். "நாங்கள் நாள்தோறும் அந்த தர்மம் செய்துவருகிறோம். வேறு ஏதாவது

தாங்கள் கட்டளையிட்டால் செய்யத் தயாராயிருக்கிறோம்." என்று அவர்கள் ப்ரார்த்திக்க, 'அவர்களுக்கு வஸ்த்ரமிடுங்கள்' என்று சொல்லி அவர்கள் தன்னை ஒருவேளையாவது இருந்து போகும்படி எவ்வளவுதான் வேண்டிக்கொண்டாலும் ஸம்மதிக்காமல் அப்போதே அவர் அவ்விடத்தை விட்டகன்றார். இந்தக்கதையெல்லாம் கேட்ட புத்ரஸந்தானமில்லாத ஸ்த்ரீகள் சிலர் பைராகியைப் பூஜித்து வரன்பெறவேண்டுமென்று காத்துக்கொண்டிருக்க, அவர் அவர்களுடைய கண்ணுக்குப் புலப்படாமல் மாயமாய் மறைந்துவிட்டார்.

தம்பதிகள் பழையப்ரகாரமே ஏழைகளுக்கு அன்னவஸ்த்ரமிட்டு வந்தனர். குழந்தையும் நாளொருமேனியாய் வளர்ந்துவந்தது. காலக்ரமத்தில் அதற்குப் 'பகல்திருடன்' என்று நாமகரணம் செய்தார்கள். குழந்தையும் பார்க்கப் பார்க்கப் பதினாயிரங்கண் வேண்டும் என்னும்படி அழகிலும்முகக்களையிலும் அபிவ்ருத்தியடைந்து வந்தது. ராத்திருடனும் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கியிருந்தான். இப்படியிருக்கையில் ஒருநாள் அவன் ஏதோ அகஸ்மாத்தாய் கஜானாபக்கம் சென்றான்; கதவைத்திறந்தான்; உள்ளேபார்த்தான். தனமெல்லாம் பெரும்பாலும் செலவழிந்துபோய்க் கஜானா காலியாய்த்தென்பட்டது. இந்தக்கஜானா மறுபடியும் எப்போது நிறையப்போகிறது என்று அவனுக்குத் திகில் உண்டாயிற்று. சற்றுக்கெல்லாம் மனதை ஒருவிதமாய் திடப்படுத்திக்கொண்டு பெண்சாதியைப்பார்த்து "நமது கண்மணி புத்ரன் விஷயமாய் நமதுபொக்கசம் காலியாய்விட்டது. அதை இப்போது மறுபடியும் பூர்த்திசெய்ய வேண்டும். ஆகையால் நான் மறுபடியும் என் உத்தியோகத்துக்குப் புறப்பட்டுப்போகிறேன். இதுவரைக்கும் நமது ப்ராந்த்யத்தில் ஒரு தனிகனையாவது பாக்கிவைக்காமல் கொள்ளையடித்தாய்விட்டதால், இனி நமதுசோரத்தனத்தைத் தூரதேசஞ்சென்று பரீக்ஷிக்கப்போகின்றேன்" என்று சொன்னான்.

அதைக்கேட்டு அவள் வ்யஸனமுற்றவளாய் "தங்களுக்கு இந்த யோசனை உண்டானதேன்? நமது செல்வக்குழந்தை விஷயமாய் எவ்வளவு தனம்தான் செலவழிந்தாலென்ன? என்ன முழுகிப்போயிற்று? மலையத்தனை குவியலில் சிறிது குறைந்தாலென்ன? இல்லை அதிகமாய்த்தான் செலவாய்விட்டாலென்ன? இருக்கும் பணத்தை வைத்துக்கொண்டு நமது பிள்ளை, பேரப்பிள்ளை, அவனுக்கும் பேரப்பிள்ளை காலம்வரைக்கும் ராஜபோகமாய் வாழ்ந்திருக்கலாமே! இப்படியிருக்கத்தாங்கள் இன்னும் பணம் தேடவேண்டிய அவசியமென்ன? இந்த விலையற்ற ரத்னத்தை விட்டுச்செல்ல தங்கள் மனம் எப்படி ஒப்பியது?" என்றுப் பலவாறாய்ப் பர்த்தாவின் எண்ணத்தை மாற்ற முயன்றாள்; ஒன்றும் பயன்படவில்லை. அவன் தான்கொண்ட எண்ணத்தை மாற்றவில்லை; குழந்தையை ஜாக்ரதையாய் வளர்த்துவரும்படி எச்சரித்துவிட்டு மறுநாளே புறப்பட்டுவிட்டான்.

ஸுகுணவதி என்னசெய்வாள், பாவம்! திருடன் பெண்சாதி என்றைக்கும் கைம்பெண்டாட்டி என்பதை எண்ணிச் சோரத்தொழிலாய்த் தூரதேசம் சென்றிருக்கும் தன்புருஷனை நினைத்து மனம் ஒருபக்கம் தவிக்க, இன்னொரு பக்கம் தவம்செய்துப் பெற்றெடுத்த தன் அருமைக்குழந்தையின் மழலைச்சொற்களைக் கேட்டு மனம் ஆனந்தமடைய இவ்வாறாக அவள் ஸந்தோஷமும் துக்கமுமாய்க் காலங்கழித்துவந்தாள். ஒழிந்த வேளைகளிலெல்லாம் அவள் தன் கணவனைக்குறித்துத் தெய்வங்களுக்குவேண்டிக் கொள்வாள். இவ்வாறாக ஒரு வாரம், ஒரு மாதம், ஒரு வருஷகாலமாயிற்று. குழந்தையும் வளர்மதியம்போல் கலைகளோங்கி வளர்ந்துகொண்டேவந்தது. ஒருவருஷம் இரண்டுவருஷமாயிற்று. இரண்டு மூன்றாயிற்று. மூன்று நாலு, நாலுஐந்து என்று காலங்கழிந்துவந்தது.

அவ்வாறு கன்னமிட்டுக்களவாடித்தனம்கைப் பற்றும் உத்தேசத்துடன் தேசாந்தரம் சென்ற ராத்திருடன் த்ராக்ஷாபுரம் என்ற ஊர்போய்ச் சேர்ந்து அங்கே வசித்திருந்தான். அவ்விடத்தில் நடுத்தெருவில் ஒரு மாடிவீட்டைக் குடிக்கூலிக்குப் பிடித்துக்கொண்டு ஒரு பெரிய ஜமீன்

காரனைப்போல் நடித்துவந்தான். இப்படி ஒரு மாஸத்துக்கெல்லாம், அவன் பட்டணத்திலுள்ள ரஹஸ்யங்கள், பணக்காரர்கள், அவர்களுடைய ஐஸ்வர்யத்தின் அளவு முதலியவற்றை நன்றாய் அறிந்துகொண்டான். அப்புறம் சில தினங்களுக்கெல்லாம் நல்ல கொழுத்த ஜமீன்தாரன் ஒருவன் வீட்டில் கன்னம் வைத்துக் கல்நகைகள் பலவற்றைக் கவர்ந்துவந்தான். அந்நகைகள் சுமார் இரண்டுலக்ஷம் ரூபாய்க்குக் குறையாது. மறுநாள் எல்லாரோடும் அவனும் ஒன்றும் தெரியாதவனைப்போல் ஜமீன்தார் வீட்டுக்கொள்ளையைப்பற்றி அதிசயிக்கலானான்.

ஒரு மாஸமாய்விட்டது. ஜமீன்தார்வீட்டில் திருடன் நுழைந்ததையும், கணக்கற்றசொத்துக்களை அபகரித்துச்சென்றதையும், அத்திருடன் அகப்படாததையும் எல்லாவற்றையும் ஜனங்கள் அடியோடு மறந்துவிட்டார்கள். அதிகாரிகள் மாத்ரம் திருடனைக் கண்டுபிடிக்கும் முயற்சியை விட்டுவிடவில்லை. அவர்களுடைய ப்ரயத்னங்களையெல்லாம் அப்போதைக்கப்போது கவனமாய்ப் பரீக்ஷித்து அவர்கள் தன்மீது கிஞ்சித்தேனும் ஸந்தேகப்படாததைக்கண்டு தன்ஸாமர்த்யத்தை வியந்துகொண்டான். அதிகாரிகள் தான் இல்லையென்றாலும், ஜனங்களுங்கூடத் தன்விஷயமாய் யாதொருவித அநுமானமுங் கொள்ளவில்லையென்பது அவனுக்குப் பரமஸந்தோஷத்தை உண்டுபண்ணியது.

மறுநாள் மறுபடியும் யார்வீட்டையாவது பார்க்கவேண்டுமென்று எண்ணி நகரத்தின் வீதிகளின் வழியாய் போய்க்கொண்டிருக்கையில் தாஸிகள்தெருவில் ஒரு வீட்டுத்திண்ணையில் விடர்களை வசியப்படுத்தவேண்டுமென்று ஒரு வேசி ஸர்வாபரண பூஷிதையாய் உட்கார்ந்திருப்பதைக்கண்டான். ராத்திருடன் பார்த்தவுடன் இரண்டுமூன்று லக்ஷம் ரூபாய் பெறும்படியான அவளுடைய நகைகளை அபகரிக்கவேண்டுமென்று அவனுக்கு எண்ணமுண்டாயிற்று. அன்று ராத்ரியே தகுந்தவேஷம் போட்டுக்கொண்டு வேண்டிய உபகரணங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு ரத்நாவதியென்னும் அந்தவேசிவீட்டில் கன்னம்வைத்து உள்ளே நுழைந்தான். அப்போது ரத்நாவதி இன்னும் தூங்கவில்லை. அன்றையதினம் அவள் வீட்டுக்கு ஒரு பெருந்தனிகன் வந்திருந்தான். அவனை ஸந்தோஷிப்பிப்பதற்காக அவள்நன்றாய்க் குரலெடுத்து அதிசாதுர்யமாய்ப் பாடிக்கொண்டிருந்தாள். அந்தஸ்திதியில் அவளைக்கண்ட ராத்திருடன் அவள்மீது மோகங்கொண்டான். அவளைத் தன்வைப்பாட்டியாகச்செய்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டான். அவளிடமிருந்த நகை, தனம் முதலியவற்றைத் திருடவேண்டுமென்ற எண்ணத்தை அடியோடு ஒழித்துவிட்டு வீடுசென்று மறுநாள் அஸ்தமன ஸமயத்துக்கு ஸரியாய் ஒருபெரிய ராஜாவைப்போல் அலங்கரித்துக்கொண்டு அவள் வீட்டுக்கெதிராய்ச் சென்றான். தெருவில் நின்றுகொண்டிருந்த ரத்நாவதி அவனைக்கண்டவுடன் பணம்பறிப்பதற்கு ஸரியான ஆளென்று நினைத்துத் தன் தாதியைக் கூப்பிட்டுத் தான் அவர்மீது மோகங்கொண்டதாயும், அவர் உடனே வராவிட்டால் தான் ப்ராணனைவிட்டு விடுவதாயும் சொல்லியனுப்பினாள். தன் கோரிக்கை நிறைவேறிற்றென்று ஆனந்தித்துக்கொண்டே ராத்திருடன் தாதியுடன் ரத்நாவதி வீட்டுக்குள் சென்றான்.

ரத்நாவதியும் அவளுடைய தாயாரும் அன்றையதினம்முதல்கொண்டு அவனை அநேகவிதமாய் உபசரித்து மரியாதைசெய்து வந்தார்கள். அந்த உபசாரத்தையும், மரியாதையையும், சுகத்தையும் கண்டு ஸகலமும் மறந்து மதிமயங்கி அங்கேயே இருந்துவிட்டான். இப்படி ஒரு வருஷமாய்விட்டது. ராத்திருடன் தான் ஜமீன்தாரன்வீட்டிலிருந்து திருடிவந்தசொத்தையெல்லாம் அவளுக்குக்கொடுத்துவிட்டு அப்போதைக்கப்போது பரமரஹஸ்யமாய் வெளியூர்களுக்குப்போய்த் திருடிவந்து ஸ்வேச்சையாய்க் காலங்கழித்துக்கொண்டிருந்தான். இவ்வாறு இன்னொரு வருஷமுமாயிற்று. வீட்டைவிட்டு வந்து இரண்டு வருஷகாலத்துக்கு மேலாயிற்று. ரத்நாவதி வலையிலகப்பட்டுப் பெண்சாதி பிள்ளைகளை அடியோடு மறந்துவிட்டான்.

இரண்டு வர்ஷமாயிற்று. பர்த்தா திரும்பி வரவில்லை. அவரைப்பற்றியஸமாசாரமொன்றும் தெரியவுமில்லை; வேறென்னவேண்டும்? திருடன் பெண்சாதியவள் ஸுகுணவதி மிகவும் வருத்தப்படலானாள். ஒற்றர்களைக் கூப்பிட்டு அவர்களுக்கு நிறைய பணம் வாரிக்கொடுத்துத் தன் பர்த்தாவின் க்ஷேமாதிசயங்களைக் கண்டறிந்து வரும்படி அவர்களை நாலாதிக்குகளுக்கும் அனுப்பினாள். தூரதேசத்திலிருக்கும் ராத்திருடன் ஸமாசாரங்களெல்லாம் அவளுக்கு எப்படித்தெரியக்கூடும். அவன் சிக்கியிருக்கும் வலையை அவள் எப்படிக்கண்டறிவாள்? தன் புருஷன் அதிகாரிகள் கையிலகப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டோ அல்லது கொலை செய்யப்பட்டோ இருப்பானென்று அநுமானித்து அவள் மனத்துயரப்பட்டாள். புத்திரனல்லாத விசாரத்துக்குப்பதிலாய் இப்போது அவளுக்கு, 'திரும்பி நான் என் கணவனைக் கண்ணால் காண்பேனா?' என்ற விசாரம் மேலிட்டது.

ஒற்றர்கள் எல்லாத்தேசங்களிலும் சுற்றித் திரிந்து கடைசியாய் த்ராக்ஷாபுரம் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் ஒருநாள் வேசியர்தெருவில் போய்க்கொண்டிருக்கும்போது ராத்திருடன் ரத்நாவதியுடன் ஷிகார் போய்வருவதைக் கண்டார்கள். உடனே அவர்கள் அவனைச் சூழ்ந்துகொண்டு: "ஐயா, தங்களுடைய பத்னி தங்களைப்பற்றி எவ்வளவோ விசாரப்பட்டுக்கொண்டிருக்கிறாள்; உங்களைத் தேடிக்கொண்டு நாங்கள் எத்தனையோ தேசங்களெல்லாம் அலைந்துதிரிந்தோம்; இன்றைக்குத்தான் நாங்கள் உயிர்பிழைத்தோம்; அப்பப்பா என்ன அலைச்சல்! கால்களெல்லாம் செருப்பாய்த்தேய்ந்துபோய் விட்டன; உங்கள் குமாரன் 'அண்ணா, அண்ணா' என்று உங்களைக்கூப்பிட்டுக்கொண்டிருக்கிறான்; ஆதலால், தாங்கள் இனி க்ஷணமும் தாமதிக்காமல் புறப்படவேண்டும்" என்று ப்ரார்த்தித்தார்கள். இதைக்கேட்டு ராத்திருடன் அதி ஆச்சர்யப்பட்டவனைப்போல் பாவனைசெய்து, "நீங்கள் யாரோ நான் அறியேன்; நான் குஜராத் தேசத்தவன்; என்னை நீங்கள் வேறுயாரோ ஒரு மனிதன் என்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். நான் ஒருபெரிய ஜமீன்தாரன்; என்பெயர் ஸோமசேகரன் என்பார்கள்; நீங்கள் என்னை இன்னாரென்று தெரிந்துகொள்ளாததால் நான் இதுவரைக்கும் நீங்கள் சொல்லியவற்றையெல்லாம் சஹித்தேன்; இனி வாயைமூடிக்கொண்டு வந்தவழியைத் தேடிப்போங்கள்; இல்லாவிட்டால் நன்றாயிராது" என்று கோபமாய்ச் சொல்லியனுப்பிவிட்டான். இந்த உபந்யாஸத்தையெல்லாம் கேட்டு ஒற்றர்கள் இது என்ன விந்தையாயிருக்கின்றதென்றெண்ணி தலைதப்பியது தம்பிரான் புண்ணியமென்று அவ்விடத்தினின்று ஓடிப்போய்விட்டார்கள். ராத்திருடனும் இந்த சனியன்களைச் சாக்குபோக்குச் சொல்லி விரட்டியடித்துவிட்டோம் என்று ஸந்தோஷப்பட்டான்.

ராத்திருடன் தான் குஜராத் ஜமீன்தாரனென்று சொல்லி அதட்டியனுப்பிவிட்டபோதிலும் ஒற்றர்களுக்கு அவன் வார்த்தையில் நம்பிக்கையுண்டாகவில்லை. ராத்திருடன் தாஸிவலையிலகப்பட்டுத் தவிக்கிறானென்று நிச்சயித்து மேலேசெய்வதொன்றும் தெரியாமல் அவர்கள் உடனே ஸ்வதேசம் சென்றார்கள். அவர்களைப் பார்த்து ஸுகுணவதி "என்ன விசேஷம்? என் புருஷன் ஸங்கதியாவது தெரிந்துவந்தீர்களா?" என்று ஆத்ரத்துடன் கேட்டாள். ஒற்றர்களும் நடந்ததைச் சொன்னார்கள். ஸுகுணவதியும் உடனே துக்கம்மேலிட்டுக் கீழேவிழுந்து ப்ரலாபிக்கலானாள். நல்ல மானமுள்ள குலஸ்த்ரீகளுக்குப் பர்த்தா பரஸ்த்ரீலோலனாயிருப்பதைவிட வேறென்ன காரணம்வேண்டும் விசாரத்துக்கு? இன்னொருதடவை அவர்களை விசாரித்துப் பிற்பாடு ஒருவாறு மனதைத் திடப்படுத்திக்கொண்டு, அப்பேர்ப்பட்ட பதிலளித்த புருஷனைப்பற்றி இனி என்ன ப்ரயத்னம் செய்தாலும் பலனில்லையென்று நினைந்து, தான் செய்த புண்ணியமும் தன் தலையெழுத்தும் ஸரியாயிருந்தால் இன்றைக்கோவிட்டாலும் என்றைக்காவது ஒருநாள் வந்துசேருவார் என்று நிச்சயம்செய்துகொண்டாள். இவ்விதமாகப் பத்துப்பதினைந்து வருஷங்கள் கடந்தன. அப்போதுகூட ராத்திருடனுக்கு ஸ்வதேசம் போகவேண்டுமென்று

ஊது பெண்பிள்ளைகளைப் பார்க்கவேண்டுமென்றாவது எண்ணம் உண்டாகவில்லை. ஸுகுணவதிக்கு அவ்வளவுதான் கிடைக்கும். எப்படி அதிகமாய்க் கிடைக்கக்கூடும்? ரத்நாவதிக்குமுன் எம்மாத்ரம் அவள்? புதிய சட்டமுகியிருக்க பழபதரிக்ரம் எதற்கு? அப்பேர்ப்பட்ட ஆனந்த லோகத்தின்மீது அமர்ந்திருப்பவனுக்குப் புத்ரனுடைய ஞாபகம் மாத்ரம் எப்படி உண்டாகும்? ஸுகுணவதிக்கு இனி தன் புருஷன் வரப்போகிறான், நாம் அவனைக் கண்ணாரக்கண்டு களிக்கப் போகிறோம் என்ற நம்பிக்கையே அடியோடு போய்விட்டது. நாம் கொடுத்துவைத்தது இவ்வளவுதான் என்று தேற்றிக்கொண்டு, ஸரி புத்ரனாவது இருக்கிறானே அவனும் இல்லாவிட்டால் நம் கதி என்னவாயிருக்கும் என்று இருப்பதைக் கொண்டு த்ருப்தியடைந்தாள்.

பகல் திருடனுக்கு வயது பதினாறாயிற்று. அதற்குள்ளேயே அவனுக்குக் குலவித்தையில் அதிக ஸாமர்த்யம் உண்டாய்விட்டது. துப்பாக்கிவயிற்றில் பீரங்கியென அவன் சோரத்தொழிலில் தகப்பனிலும் பதின்மடங்கு அதிக சதுரனானான்; வயதுக்குத் தகுந்த விவேகமும் பூர்ணமாய் உண்டாய்விட்டது. ஆதலால், ஒரு நாள் அவன் தன் தாயாரைப்பார்த்து, "அம்மா, நான் எத்தனைதடவை கேட்டாலும் என் தகப்பனாரைப்பற்றிய விஷயங்களொன்றையும் நீ இதுவரைக்கும்எனக்குத்தெரியப்படுத்தவில்லை. ஊராரெல்லோரும் ஒருமாதிரி சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் சொல்வது நிஜமா அல்லது வேறே வ்ருத்தாந்தம் ஏதாவதுஉண்டா?" என்று நச்சுநச்சென்று கேட்டான். இனி மறைத்து வைப்பது யுக்தமன்று எனவெண்ணி "ஊரார் சொல்வதில் எள்ளளவேனும் பொய்கிடையாது; அவர்கள் சொல்வதெல்லாம் அவ்வளவும் உண்மைதான்" என்று ஸுகுணவதி அதிக வருத்தத்துடன் சொன்னாள். "அப்படியானால் நான்போய் என்தந்தையை அழைத்துவருகிறேன்; நாளையே நான்புறப்படுகிறேன்; ப்ரயாணத்துக்குவேண்டியதெல்லாம் ஸித்தம் செய்துவை" என்று பகல் திருடன் தாயாரிடம் சொன்னான். "அப்பா நீ அப்பேர்ப்பட்ட ஸாஹஸகாரியம் ஒன்றும்செய்ய வேண்டாம். அப்பா, குழந்தை நீ தூரதேசத்துக்குச் செல்வது உன்னால் ஸாத்தியமான கார்யமன்று. மேலும், உன்தகப்பனாருக்குத்தான் என்மீது தயையிராமல் போய்விட்டாலும் நான் இதுவரைக்கும் உன்னைப் பார்த்துக்கொண்டு ப்ராணனை வைத்திருக்கிறேன். நீ தூரதேசம் போனால், நீ திரும்பிவருமட்டும் நான் ப்ராணனை வைத்துக்கொண்டிருக்க முடியாது. உன் தகப்பனாரும் இராமல் நீயும் இராமல் நான் எவ்வாறு இவ்விடத்தில் தனியாயிருப்பேன்? நமக்கு நல்ல காலம் எப்போது உண்டாகிறதோ அப்போது தான் உனது தகப்பனார் திரும்பிவருவார். அவரைத்தேடிச்செல்வது வீண். நீ செல்வதால் என் ப்ராணன் போவதுதான் மிச்சப்படும்" என்று தன்னாலானமட்டும் ஸுகுணவதி தன் மகனது எண்ணத்தை மாற்றமுயன்றாள். அவன் யாருடைய பிள்ளை? விரையொன்று போட்டால் சுரையொன்று முளைக்குமா? தகப்பனுக்குள்ள பிடிவாதகுணம் எங்கேபோகும்? பகல்திருடன் தாயாரைத் தன்னாலானமட்டும் ஸமாதானப்படுத்திவிட்டுத் தந்தையைத் தேடிச்சென்றான். காசிராஜன் அந்தப்புரத்தினின்று திருடிவந்த ஜரிகை பட்டு சால்வையின்மீது தன் தகப்பனுக்கு அத்யந்தப்ரியமென்று தாயார் சொல்லக் கேட்டுப் பகல்திருடன் போகும்போது அச்சால்வையையுடனெடுத்துச்சென்றான். ஸுகுணவதி பர்த்தாவின் க்ஷேமத்தையும் புத்ரனுடைய க்ஷேமத்தையும் கோரிப் பல தெய்வங்களுக்கு ப்ரார்த்தனைசெய்தவண்ணமாய் அவர்களுடைய வருகையை எதிர்ப்பார்த்திருந்தாள்.

(இன்னும் வரும்.)

தாதாபாய் நௌரோஜி.

இதில் காலஞ்சென்ற தாதாபாய் நௌரோஜியின் ஜீவிய சரித்திரமும், அவர் எழுதிய ஸ்வயசரித்திரமும், அவரது குணாதிசய விவரங்களும், அவர் வயோதிக காலத்தில் வாழ்நாளைக் கழித்த விவரங்களும் அடங்கியிருக்கின்றன.

விலை அணா 3.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர்.

(தென்னிந்தியா.)

# Insect Pests.

## பயிர்களை நாசமாக்கும் பூச்சிகள்.

சென்ற மாதத்து "ஜனோபகாரி"யில் பூச்சிகள் பயிர்களை நாசமாக்காமலிருப்பதற்காக சென்னை கவர்ன்மெண்டு பூச்சிசாஸ்திரியாயிருந்த டி. ப்ரெயின்ப்ரிக்கி ப்ளெச்சர் எழுதியுள்ள சில விஷயங்களைக் கூறினோம். இன்னும் அவர் அண்டு பத்திரிகையின் மூலமாக வெளியிட்டுள்ள சில விஷயங்களை இங்கு எழுதுகிறோம்.

இந்த ஸாதனங்கள் பூச்சிகள் ஏராளமாகத் தோன்றுவதற்கு முன்பாகவாவது அல்லது அவைகள் அதிகமாகத் தோன்றின பிறகாவது, அவைகளை மருந்து முதலிய பிரயோகங்களாலும், பொடிகளாலும், ஆவியினாலும் கொல்லாமல் கையினால் செய்யக்கூடியவைகளாகும். ஆனால் மருந்தின் பிரயோகத்தால் செய்யப்படுகிற முறைகளுக்கும் கையால் உபயோகப்படுத்தக்கூடிய சாதனங்களுக்கும் அதிக வித்தியாசம் உண்டென்று சொல்ல முடியாது. கையால் செய்யக்கூடிய சாதனங்களில் கீழே குறிப்பிட்டிருக்கிறவைகள் அடங்கும். அவை யாவன:—

பூச்சிகளைக் கையால் பிடிப்பது; கைவலை அல்லது பெரிய வலையை உபயோகித்தல்; 'ஹாப்பர் டோஸர்' (Hopper Dozer) என்று சொல்லப்பட்ட வெட்டுக்கிளிகளைப் பிடிப்பதற்கான பெட்டிகளை உபயோகித்தல்; விளக்குப் பொறி வைத்தல்; மற்ற வகைப் பொறிகளை வைத்து பூச்சிகளை அவைகளிடத்திற்கு வரும்படி செய்தல்; கிடங்குவெட்டி பூச்சிகளை ஒரு வயலிலிருந்து மற்றொரு வயலுக்குள் தாண்டவொட்டாமல் செய்தல்; தீயினால் கொளுத்தி எரித்துவிடுதல்; மரத்தைச்சுற்றிலும் கீல் எண்ணெய் முதலியவைகளைத் தடவியும், தகரத்தால் செய்த குடைகள் போன்ற சாதனங்களை உபயோகித்தும் பூச்சி, எலி முதலியவைகளை மரத்தில் ஏறவொட்டாமல் தடுத்தல்; காய் பழங்களை துணி அல்லது காகிதப்பையினால் மூடிவைத்தல்; மரத்தின் தண்டுகளில் உள்ள புழுக்களை எடுத்துக் கொல்லுதல்; பட்டுப்போன மரங்களையும் அவைகளின் கிளைகளையும் அப்புறப்படுத்தல்; புழுக்களால் வெட்டப்பட்ட குருத்துக்களை வெட்டி அப்புறப்படுத்தல் ஆகிய இவைகளே.

கையினால் பூச்சிகளைப் பிடிப்பது வெகு சுலபமான வழியாகும். மேலும் பூச்சிகள் பயிரில் தோன்றி அவைகள் சுவல்பமாக இருக்கும்பொழுதே, கையினால்பிடிக்க ஆரம்பித்து இடைவிடாமல் ஒழுங்காகப் பிடித்துக்கொண்டே வந்தால், பூச்சிகளை விருத்தியாகாமல் தடுக்கலாமென்பதற்குச் சந்தேகமில்லை. பூச்சிகளைப் பிடிக்காமல் அவைகள் விருத்தியாகும்படி விட்டுவிட்டால், வெகு சீக்கிரத்தில் கையால் பிடிக்க முடியாதபடி அவ்வளவு ஜாஸ்தியாக விருத்தியாகும். ஆனால் பூச்சிகள் தோன்றினவுடனே அவைகளைக் கொன்றுவிடுவோமானால் அவைகளை விருத்தியாகாமல் தடுத்துவிடலாம். உதாரணமாக: 1912-ம் வருஷத்தில் கோயமுத்தூர் விவசாயக்காலேஜைச்சேர்ந்த பண்ணையில் சம்பளிப்பூச்சிகள் தோன்றின. அவற்றைக் கையால்பிடிக்கும்படி ஒரு சிறு பையனை அனுப்பியதில் 4-நாட்களுக்குள் நூற்றுக்கணக்கான புழுக்கள் பிடிக்கப்பட்டன. இப்படிச் செய்ததில் அந்த சந்ததியால் நஷ்டம் ஏற்படாமலிருந்ததும் தவிர, அந்த வருஷத்தில் அப்பூச்சிகளில் வேறே சந்ததிகளும் தோன்றவில்லை. முதலில் தோன்றிய சம்பளிப்பூச்சிகளைப் பிடிக்காமலிருந்தால், அதே வருஷத்தில் அப்பூச்சிகளில் குறைந்தது இரண்டு சந்ததிகள் தோன்றி அதிக நஷ்டத்தை உண்டுபண்ணியிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ஏனென்றால், இவ்விதம் பூச்சிகளை முதலிலேயே பிடிக்காமல் விட்டுவிட்ட பக்கத்துப் பிரதேசத்தில் அதிக நஷ்டம் உண்டானதாகத் தெரிகிறது. ஆகையால் இப்படி ஆரம்பத்திலேயே பூச்சிகளைக் கையால் பிடிப்பது யாவரும் அனுஷ்டிக்கக்கூடியபடி இவ்வளவு லகுவாயும் ஸ்வல்ப பணச்செலவினால் ஆகக்கூடியதாயுமிருப்பதால், ஒவ்வொரு குடியானவனும் பயிருக்குக் கெடுதலை உண்டாக்குகிற பூச்சிகளைப்

பார்க்கும்போதெல்லாம், பயிரில் கொஞ்சமாகத் தோன்றியபோதிலும், அவைகள் அதிகமாகக்கூடாதென்ற நோக்கத்துடன் அவைகளைப் பிடித்துக் கொல்லவேண்டும். பூச்சிகள் ஏராளமாக விருத்தியாகிப் பயிரையும் நன்றாய்த்தின்று அழித்தபிறகு அவைகளைக் கொல்லுவதற்கு பிரயத்தினப்படுவது கொஞ்சமேனும் உபயோகப்படாது.

இப்படி பூச்சிகளைக் கையால்பிடித்து கொல்லும்விதம் பூச்சிகளின் ஜினுஸுக்குத்தக்கபடி வேறுபட்டிருக்கிறது. மயிரில்லாத புழுக்கள், பெரிய நாவாய்ப்பூச்சிகள், வண்டுகளில் அநேக ஜினுஸுகள் இவைகளை கையால்பிடித்து நசுக்கிக் கொல்லலாம். புழுக்கள் பெரியவையாயிருந்தால் அவைகளைக் காலால் நசுக்கிக்கொல்லலாம். கம்பிளிப்பூச்சியையும், ப்ளிஸ்டர் பீட்டில்ஸ் (Blister Beetles) என்ற கொப்புளம் எழும்பச்செய்யக்கூடிய ஒருவித சத்தை வெளிப்படுத்தும் வண்டுகளையும், ஒரு பாத்திரத்தில் தண்ணீரைஊற்றி அதன்மேல் கொஞ்சம் மண்ணெண்ணெயை ஊற்றி அப்பாத்திரத்தில் அவைகளைப்போட்டுக் கொல்லலாம். பருத்திப்பயிரில் தோன்றுகிற நாவாய்ப்பூச்சிகளைப் பிடிப்பதற்கு சில வேளைகளில் ஒரு துணிப்பையின் வாயில் ஒரு தகரப்பெய்குழல் (Funnel) ஒன்றை வைத்து அதன்வழியாய் அந்தத் துணிப்பைக்குள் அப்பூச்சிகளை விழும்படி செய்வதால், அவைகள் அதிலிருந்தும் தப்பித்து, வெளியேற முடிகிறதில்லை. கொஞ்சம் உயரமான செடி அல்லது மரங்களினின்று பூச்சிகளைப் பிடிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில், வேறே மார்க்கம் ஒன்றும் கிடைக்காமற்போனால், தலைகீழாய்ப் பிடிக்கப்பட்ட ஒரு குடையானது அவைகளைப் பிடிக்க ஒரு சிறந்த சாதனமாகும்,

வெறுங்கையால் பிடிக்க முடியாதபடி அவ்வளவு சுறுசுறுப்பாய் ஓடித்திரியக்கூடிய பூச்சிகளைப் பிடிக்க ஒரு கைவலை மிகவும் உபயோகமுள்ளதாயிருக்கும். இந்தக் கைவலையை சுலபமாயும் விலை சகாயமாகவும் செய்துகொள்ளலாம். ஒரு சிறு கவைக்கொம்பின் இரு நுனியிலும் வளைக்கப்பட்ட பிரம்பு அல்லது ஒரு லேசான குச்சியை கவைகளின் ஒவ்வொரு நுனியிலும் தனியேகட்டி, கவையின் அடிப்புறத்தை கைப்பிடிப்பாக வைத்துக்கொண்டு வளைத்துக் கட்டப்பட்ட பிரம்பைச்சுற்றிலும் ஒரு லேசான துணிப்பையைத் தைத்துவிடவேண்டும். இப்படிப்பட்ட வலையால் பறந்து ஓடக்கூடிய பூச்சிகளாகிய நெற்பயிரில் தோன்றும் நாவாய்ப்பூச்சிகள், வண்டுகளில் அநேக ஜினுசுகள் இவைகளைப் பயிரிலிருந்துபிடித்து விடலாம். அதேவலையினால் வெட்டுக்கிளியையும் பிடிக்கலாம். அவ்வலையில் பிடிக்கப்பட்ட பூச்சிகளை கையினால் அல்லது காலால் நசுக்கி அல்லது கல்லைக்கொண்டு நசுக்கிக்கொல்லலாம்; அல்லது தண்ணீரும் கொஞ்சம் எண்ணெயும் கலந்துவைக்கப்பட்ட ஒரு பாத்திரத்தில் போட்டுக்கொல்லலாம். ஒரு பயிரானது வெட்டுக்கிளிகளால் பிடிக்கப்பட்டிருக்குமானால் அந்தச்சந்தர்ப்பத்தில் துணியால் செய்த ஒரு பெரிய வலையை உபயோகிக்கவேண்டும். ஏனென்றால் அவ்விதம் ஒரு பெரியவலையைக்கட்டி இழுப்பதனால் வயல் முழுவதும் இழுக்கப்பட்டு, ஏறக்குறைய எல்லா வெட்டுக்கிளிகளையும் பிடிக்கச் சாத்தியமாகிறது. மேலே சொல்லிய பெரிய வலையானது 4 அடி அகலமும் வாய்ப்புறம் 2 அடி குறுக்களவுமுள்ளது. ஆழத்தில் 5 அல்லது 6 அடியும் உள்ளது. அதன் அடிப்பாகமானது நாலுமூலைகளும் ஒரே இடத்தில் சேர்க்கப்பட்டு குவிந்திருக்கும். வேலை செய்யும்போது வாய்ப்புறம் திறந்திருப்பதற்காக அதன் வாய்ப்புறத்தில் 4 அல்லது 5 அடி நீளமுள்ள இரண்டு மூங்கில்கள் கட்டப்பட்டிருக்கும்; அதேமூங்கில்களை கைப்பிடியாகவும் உபயோகப்படுத்தலாம். வயலில் இழுக்கப்படும்போது வலையின் அடிப்பாகம் நேராக இருப்பதற்காகவும், அது தரையோடு தொய்யாமல் சேர்ந்துவருவதற்காகவும், அதன் அடிப்பாகத்தில் மற்றோர் மூங்கிலும் கட்டவேண்டும். வலையானது பயிரின் ஊடே இழுக்கப்படும்போது எதிர்க்காற்றினால் சுலபமாகத் தலைகீழாகத்திருப்பப்பட்டு, அதில் பிடிக்கப்பட்டிருக்கும் வெட்டுக்

கிளிகள் கீழேவிழாமலிருக்கும்படிக்கும்,பையின் குவிந்திருக்கும், அடிப்பாகம் திரும்பிவிடாமலிருக்கும்படிக்கும் அதில்கொஞ்சம் பளுவான கல் அல்லது கட்டையைக் கட்டவேண்டும். மேல் சொல்லிய வலையை இழுக்க இரண்டுபேர்கள் வேண்டும். வாய்ப்புறம் உள்ள மூலையை கைப் பிடியாக உபயோகித்து பயிரின் ஊடே எவ்வளவு வேகமாகச்செல்லக்கூடுமோ அவ்வளவு வேகமாக இழுக்கவேண்டும். வலையானது இழுக்கப்படும்போது, பயிரிலுள்ள வெட்டுக்கிளிகள் அவைகள் தங்கியிருந்த இடங்களிலிருந்து கலைக்கப்பட்டு செடிகளிலிருந்தும் தாவிக்குதித்து அவைகள் தரைக்கு வருவதற்கு முன்பாகவே வலைக்குள் விழுந்துவிடுகின்றன. ஒவ்வொரு தடவையிலும் பிடிக்கப்பட்ட வெட்டுக்கிளிகளை வலையின் அடிப்புறத்தில் சேர்த்து நசுக்கிக் கொல்லலாம். அல்லது ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் கொஞ்சம் மண்ணெண்ணெயும் ஊற்றி அதில்போட்டு அவை சாகும்படி செய்யலாம். அதிகமான வெட்டுக்கிளிகளைப் பிடிக்க கீழே குறிப்பிட்ட விஷயங்களைக் கவனிக்கவேண்டும்.

1 வலையைத் தரையோடு எவ்வளவு ஒட்டி இழுக்கமுடியுமோ அவ்வளவு ஒட்டி இழுக்க வேண்டும்.

2. வலையை இழுக்கிற மனிதர்கள் அதிக வேகமாய் இழுத்துக்கொண்டு ஓடவேண்டும்.

3. கூடியவரையில் வலையை காற்றுக்கு எதிராக இழுக்கவேண்டும்.

ஒருவலையைக்கொண்டு ஒருநாளைக்கு ஏறக்குறைய 3 ஏகரா பூமியை இழுக்கலாம். அதை வேலைசெய்ய 3 பேர் தேவையாயிருக்கும். இரண்டுபேர் வலையை இழுத்துக்கொண்டிருக்கவும், மூன்றாவது மனிதன் வலைஇழுத்துக்கொண்டிருப்பவர்களில் ஒருவனை முறைப்படி மாற்றிக்கொண்டிருக்கவும் வேண்டியிருக்கும். ஒரு பயிரானது வெட்டுக்கிளிகளால் அதிகமாய்ப் பிடிக்கப்பட்டிருந்தால், அதில் பல தடவைகள் வலையை இழுக்கவேண்டியிருக்கும். எத்தனை தடவை இழுக்கவேண்டுமென்பது வெட்டுக்கிளியின் உபாதிக்குத்தக்கபடியும், பயிரின் வளர்ச்சிக்கும் பூமியின் தன்மைக்கும் தக்கபடியும் வேறுபட்டிருக்கும். நெல் சோளம் முதலிய பயிர்கள் அதிகமாய் வளர்ந்தபிறகு அவைகளில் வலையை இழுப்பதில் உபயோகமில்லை. ஏனென்றால், வெட்டுக்கிளிகளைப்பிடிக்க வலையைத் தரைமட்டத்திற்கு இழுப்பது அசாத்தியமாயிருப்பதும் தவிர, பயிரின் ஊடே வலையை இழுக்கும்போது செடிகள் வலையை இழுப்பவர்களால் மிதிக்கப்பட்டு பயிருக்கு அதிக சேதமும் உண்டாகும். ஆனால் அவ்வித பயிர்கள் 3 அடி உயரத்திற்கு அதிகப்படாமலிருக்கும்போது சுலபமாய் வேலைசெய்யலாம்.

கைவலையையும் பெரிய வலையையும் பயிரில் வெட்டுக்கிளியைப் பிடிக்க உபயோகிப்பதற்கு முன்னால், அவைகளை எண்ணெயில் நனைத்து அதன் பிறகு அவைகளை உபயோகித்தால் பூச்சிகள் அதிகமாகப் பிடிக்க சாத்தியமாகிறதென்று தெரிகிறது. ஆனால் இவ்விதம் செய்வதற்கு கழிவடை எண்ணெய் வெகு சுலபவிலையில் கிடைத்தால் மாத்திரம் செய்யலாம்.

பயிருக்குக் கெடுதல்பண்ணுகிற பூச்சிகளில் அநேகத்தில் முழுவதும் வளர்ந்தவைகளை விளக்குப்பொறிகளை வைத்து அவைகளிடம் அப்பூச்சிகளை வரும்படிசெய்து கொல்லலாம். விளக்குப்பொறிகள் செய்வது சுலபம். மேலும் செலவும் குறைவு. நெல் கேப்பையைப்போன்ற பயிர்களில் தோன்றுகிற குருத்துப்பூச்சியின் தாய்ப்பூச்சியை பிடிக்கச் சிறந்த வழியாக ஏற்படலாம். ஒருநாள் ராத்திரிமுழுவதும் எரிவதற்கு வேண்டிய எண்ணெய் பிடிக்கக்கூடிய ஒரு சாதாரண லாந்தல் விளக்கே போதுமானது. அதைத் தண்ணீரும் எண்ணெயும் கலந்து வைக்கப்பட்ட ஒரு தட்டத்தில் வைத்தோ அல்லது அதற்குமேல் நேராகத் தொங்கவிட்டோ இருக்கவேண்டும். மேற்படி லாந்தல் தொங்கிக்கொண்டிருக்கும்போது தட்டத்தில் குறைந்தது ½ அடி தூரம் இடம் லாந்தலைச் சுற்றி நாற்புறமும் இருக்கவேண்டும். இப்பேர்ப்பட்ட ஒரு விளக்குப்பொறியை பயிரின் ஊடே வெளிச்சம் நாற்புறமும் தெரியும்படி பயிருக்குச்சற்று உயரமாய் வைக்கவேண்டும். மண்

எண்ணெயோடு தேங்காய் எண்ணெயைக்கலந்து விட்டால் விளக்கு நன்றாய் எரிவதோடு செலவும் குறையும். அஸ்தமனமான சமயத்தில் விளக்கை ஏற்றி ராத்திரிமுழுவதும் எரியவிடவேண்டும். விளக்கை நோக்கிவரும் பூச்சிகள் விளக்கின் கண்ணாடியில் மோதி கீழேயிருக்கிற தண்ணீரும் எண்ணெயும் கலந்துவைக்கப்பட்ட தட்டத்தில் விழுந்து சாகும். இவ்விதமாய் ஏராளமான பூச்சிகள் கொல்லப்படும். மேலும் காற்றில்லாமல் உஷ்ணமான இருண்ட ராத்திரிகளில் இப்பூச்சிகள் இன்னும் அதிகமாகவரும். காற்று அதிகமாக அடித்துக்கொண்டிருக்கும்போதாவது நல்ல நிலவு காயும் போதாவது விளக்குப் பொறி வைப்பது அவ்வளவு உபயோகப்படமாட்டாது.

பூச்சிகளை மற்றவித பொறிகளை வைத்து அவைகளினிடத்திற்கு வரும்படி செய்யலாம். இவ்விதப் பொறிகள் அநேகவகைப்படும். அவைகளை விவரமாய் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல ஸாத்தியமில்லை. பயிரில் இராக்காலங்களில் சஞ்சரிக்கக்கூடிய சிலவகைப் புழுக்கள் சில்வண்டுகள் முதலிய பூச்சிகள் பகற்காலத்தில் ஒளிந்துகொள்வதால் அவைகளைத் தேடிப்பிடிப்பது கஷ்டமாகும். ஆனால் அவைகள் வந்து திரியக்கூடிய இடங்களில் புல் பத்தைகள், பலகைகள் இவைகளைப்போட்டு, அதோடு அவைகள் தின்னும்படி பயிர்களின் இளந்தளிர்களையும் போட்டுவைத்து, மறுநாள் காலையில் அப்பலகைகளையும் புல்பத்தைகளையும் சோதிக்கவேண்டும்.

வயல்களிலும், நாற்றங்கால்களைப் போன்ற சில பாகங்களிலும் நகர்ந்து வரக்கூடிய புழுப்பூச்சிகள் வராமல் தடுக்க அவைகளைச் சுற்றிலும் கிடங்கு தோண்டி வைப்பதால், அப்படிப்பட்ட பூச்சிகளை வெகுவாய் வராமல் தடுக்கலாம். இப்படிப்பட்ட கிடங்குகளின் உள்புறத்து ஓரமானது செங்குத்தாயும், பொலபொலப்பான மண்ணுள்ளதாயுமிருந்தால், அவைகள் அதிக ஆழமும் அகலமுமாய் இருக்கவேண்டியது அவசியமில்லை. தவிர, மேல்சொல்லியபடி தோண்டப்பட்ட கிடங்கின் அடிப்பாகத்தில் கொஞ்ச தூரத்திற்கு ஒரு பள்ளமாக சில செங்குத்தான பக்கங்களுள்ள பள்ளங்களும் தோண்டினால், முதலில் தோண்டப்பட்ட கிடங்கில் விழுந்த புழுக்கள் கிடங்கின் அடிப்பாகத்தில் திரிந்துகொண்டிருந்து இந்தப் பள்ளங்களில் விழ ஏதுவாகும். கம்பளிப் பூச்சிகள் தோன்றும்போது கிடங்குகளை அதிக அகலமாயும் ஆழமாயும் தோண்டி அவற்றில் கொஞ்சம் புதிய இலைகளையும் தழைகளையும் போட்டால், அவைகளைத் தின்பதற்கு அப்பூச்சிகள் வருமாகையால் அவைகளைத் தினந்தோறும் சோதித்து ஒளிந்துக்கொண்டிருக்கும் பூச்சிகளைக் கொல்லலாம். ஆனால் இப்படிக் கிடங்கில் தழைகளைப் போட்டு நிரப்பும்போது அவைகளின் உதவியால் வயலுக்குள் புழுக்கள் வெகுவாய் ஏறிப் போகஏதுவாயிராமல், பள்ளத்திற்கு உள்ளேயே தழைகள் இருக்கும்படி போடவேண்டும். ஒரு வயலுக்கும் மற்றொரு வயலுக்கும் ஊடே தண்ணீர் நிறைந்த ஒரு பள்ளமானது நாற்புறமும் இருக்குமானால், அந்தத் தண்ணீரின்மேல் கொஞ்சம் எண்ணெயை ஊற்றினால், புழுக்கள் அதைத்தாண்ட முடியாமல் போகும்.

நெருப்பு மூட்டி அதனால் சில சந்தர்ப்பங்களில் பூச்சிகளைத் தடுக்கலாம். நெருப்பின் வெளிச்சத்திற்குச் சிலவகைப் பூச்சிகள் வந்து அதில் விழுந்துசாகும். சில வேளைகளில் நெருப்பு மூட்டி சரியான விதமாய் புகைப்போடுவதால் பூச்சிகளைத் துரத்திவிடுவது சாத்தியமாகும். உதாரணமாக: மாமரங்கள் புஷ்பிக்கும் சமயத்தில் அம்மரங்களின் அடியே புகையும்படி நெருப்பு மூட்டுவதால் அம்மரத்திலுள்ள தேன்பூச்சிகளைத் தற்காலத்திற்கேயாயினும் ஓட்டிவிடலாம். இப்பூச்சிகளை மரத்திலேயே இருக்கவிட்டால் அவைகளிலிருந்து உண்டாகிற தேனால் பூக்கள் காய்பிடியாமல் கெட்டுப்போகின்றன.

ஒட்டக்கூடிய அல்லது எண்ணெய் சம்பந்தமான வஸ்துவை, மரங்களின் அடிப்பாகத்தில் அகலமான பட்டையாகத் தடவுவதாலும், அல்லது அவைகளை முதலில் ஒரு துணி அல்லது காகிதத்தில் தடவி மரங்களின் அடிப்பாகத்

தைச் சுற்றி ஒட்டவைப்பதாலும் பூச்சிகளை அம்மரங்களுக்குப் போகவொட்டாமல் செய்யலாம். இவ்விதம் செய்ய ஆயில்எமல்ஷன் என்னும் மருந்தையும், கீல் எண்ணெயும் சமபாகமாகக் கலந்து உபயோகிக்கலாம். அப்பேர்ப்பட்ட மருந்து மரத்திற்குப் பூச்சிகளை வரவொட்டாமலிருக்கும்படி செய்வதில் சிறந்ததாயிருப்பதுவும் தவிர, அதைத் தடவுவதனால் மரத்திற்கு யாதொரு கெடுதியும் உண்டாவதில்லை; ஆனால் இப்படிக்கலந்து உபயோகிக்கப்பட்ட எவ்வித மருந்தும் நம்முடைய தேசத்தில் வெகுநாளைக்கு வீர்யம் கெடாமலிருக்குமென்று சொல்லமுடியாது. எலி, மரநாய்கள் தென்னைமரங்களில் ஏறாமலிருக்க அடிமரத்தைச் சுற்றிலும், தகரத்தைக் குடைபோல்செய்து, அதை ஆணிகளால் மரத்தில் அடித்தால் அவைகளால் ஏற்படும் நஷ்டம் குறையும்.

உயர்ந்த கிழங்கு பழவர்க்கங்களையும், காய்கறி கிழங்குகளையும், ஈக்கள் முதலிய பூச்சிப் புழுக்கள் துளைக்காமலிருக்க, அவைகளை துணி அல்லது காகிதப்பைகளால் மூடிவைப்பது ஒரு லகுவான வழியாகும்.

மரங்களில் சில வர்க்கங்கள் வண்டுகள், வண்ணாத்திப் பூச்சிகள் ஆகிய இவைகளுடைய புழுக்களால் துளைக்கப்படுவதுண்டு. அப்புழுக்கள் உயிரோடிருக்கிற அம்மரங்களின் பச்சைத் தண்டுகளில் கால்வாய்மாதிரி துளைகள் பண்ணுவதால் அம்மரங்கள் சில சந்தர்ப்பங்களில் பட்டுப்போவதும் உண்டு. இப்பேர்ப்பட்ட சமயங்களில் ஒரு கத்தியைக்கொண்டு அப்புழுவை வெட்டி எடுத்துவிடுவதே சுலுவான வழியாகும். புழுவை வெட்டி எடுத்தபிறகு அந்த இடத்திற்கு மற்றப் பூச்சிகளும் பூசணநோயும் வாராதபடி, அந்த காயங்களுக்கு கீல்எண்ணெய் (தார்) பூசவேண்டும். இவ்விதம் கத்தியினால் மரத்தை வெட்டிப் புழுவை வெளியேற்றுவது மரத்திற்கு கெடுதலாயிருக்குமோ வென்று தோன்றினாலும், அவ்விதம் செய்வதுதான் புழுவைத் தொலைக்க வெகு திறமையான வழியாகவிருக்கிறது. சாதாரணமாய் மரங்களின் தண்டைத் துளைக்கிற பாடோஸிரா ரூபஸ் (Batocera rubus) என்ற வண்டின் புழு மாமரங்களைத் துளைக்கிறதென்றும், ஆரெஞ்சு முதலிய மரங்களை அதே ஜாதியைச் சேர்ந்த மற்றொரு புழு நாசம் பண்ணுகிறதாகவும் நமக்குத் தெரியும். சில சந்தர்ப்பங்களில் இப்புழுக்களை அவைகள் துளைத்திருக்கும் துவாரங்களிலிருந்து ஒரு இரும்புக்கம்பியினால் குத்திக்கொன்று வெளியேற்றலாமென்றாலும், அவைகள் துளைத்திருக்கும் கால்வாய்களை கத்தியினால் வெட்டி, புழுக்களையும் கொன்று, அக்கால்வாய்களையும் சுத்தம் செய்வதே நல்லது. இவ்விதம் செய்வது அந்த இடத்திற்கு மற்ற பூச்சிகளை வரவொட்டாமல் தடுக்க ஏதுவாகும். தென்னை, பனை முதலிய மரங்களின் குருத்துக்களைத் துளைக்கும் வண்டைக்கொல்ல ஒரு கூரான இரும்புக்கம்பியைக் கொண்டு அவைகள் துளைத்திருக்கும் துவாரத்தில் விட்டு அவ்வண்டுகளைக் குத்தி இழுக்க வேண்டும். வண்டுகள் கம்பியின் நுனியில் மாட்டிக்கொண்டு வெளியே வந்துவிடும். பிறகு அந்தத் துவாரங்களுக்குக் கீல் எண்ணெயைப் பூசவேண்டும்.

ஒரு மரம் அல்லது அதன் பாகமானது பட்டுப்போய் அல்லது பட்டுப்போகக்கூடியதாயிருந்தால், அது அநேகவித பூச்சிகள் தங்கி ஏராளமாய் விருத்தியாவதற்கு ஒரு நல்ல இருப்பிடமாகிறது. இப்பேர்ப்பட்ட செத்த அல்லது செத்து அழுகிக்கொண்டிருக்கிற மரங்களைத் தின்னக்கூடிய வண்டுகளே முக்கியமாய் அம்மரங்களில் உற்பத்தியாகி விருத்தியாகும். அவைகளுக்குப் பட்டுப்போன மரங்களில் வேண்டிய ஆகாரம் கிடைக்காமல்போனால், பச்சைமரங்களையும் பிடித்து, நஷ்டத்தை உண்டுபண்ணவும் கூடும். அதையால் பட்டுப்போன மரங்களையும், மரத்தின் கிளைகளையும், அப்புறப்படுத்தி விறகாகவோ அல்லது வேறுவிதமாகவோ உபயோகப்படுத்தவேண்டுமேயொழிய, அவைகளை பூமியிலேயே தின்றுகொண்டிருக்கவாவது வயலிலே கிடக்கவாவது விடக்கூடாது. முக்கியமாய் அழுகிக்கொண்டிருக்கிற தென்னை பனை இவைகளின் [illegible]

அடிப்பாகங்களிலும் தென்னம் வண்டின் ஏராளமான கொழுத்த வெள்ளைப்புழுக்கள் நெளிந்து கொண்டிருப்பதைப் பார்க்கலாம். மேலே சொல்லிய இடங்களிலிருந்து அவைகள் முழுதும் வளர்ந்த வண்டாகக் கிளம்பி பக்கத்திலிருக்கும் தென்னை பனை முதலியவைகளை நஷ்டப்படுத்தும்.

கருப்பு, சோளம், நெல் முதலிய பயிர்கள் குருத்துப்பூச்சிகளால் பிடிக்கப்பட்டிருக்கின்றனவாவென்பதை அவைகளின் குருத்து காய்ந்து போவதனால் அறிந்துகொள்ளலாம். அப்பேர்ப்பட்ட செடியின் சாய்ந்த குருத்தானது கையினால் தொட்டமாத்திரத்தில் கையோடுவந்துவிடும். இவ்விதம் நடுக்குருத்து வாடின ஒவ்வொருசெடியையும் பார்க்கும்போது அதன் தண்டை குருத்துப்பூச்சி துளைத்துக்கொண்டிருப்பதாகத் தெரிந்துகொள்ளலாம். ஆகையால் கரும்புப்பயிரிலும் அதைப்போன்ற முக்கியமான பயிரிலும் புழுவடித்து குருத்து காய்ந்துபோவதாகத் தோன்றினவுடன், அப்புழு அதிகமாகப் பரவாதபடி, அப்பேர்ப்பட்ட குருத்துக்களை வெட்டிக் களைந்துவிடவேண்டும் ஏனென்றால், குருத்துப்புழுவினால் வெட்டப்பட்ட பயிர் உபயோகப்படமாட்டாது. ஆனால் அவ்விதம் புழுத்தோன்றினவுடன், அக்குருத்தை வெட்டி எறிந்துவிட்டால், பக்கத்தில் கிளைகள் தோன்றி பயிருக்கு அதிக நஷ்டம் ஏற்படாமலிருக்கும். தவிர, மேல்சொல்லியவிதம் புழு தோன்றினவுடன் குருத்துக்களை வெட்டி புழுக்களைக் கொல்வதால் அந்தப் புழுக்களிலிருந்தும் வேறு சந்ததிகள் உண்டாகி அதிக நஷ்டம் ஏற்படாமலிருக்கவும் கூடும்.

---

## Sita's Enterence into the Forest.

By Pandit P. K. Srinivasachariar.

### சீதை வனம்புகுந்த சரிதம்.

ஸ்ரீராமபிரானிடம் விடைபெற்றுக் குற்றமற்ற நற்குணங்களையுடையவர்களான ஜநகன் முதலியோர் தத்தம் நகர்க்குச் செல்ல, அன்போடு குறிக்கொண்டு பாதுகாத்துப் பூபாரத்தைத் தாங்கிய மஹாவீரனாகிய ஸ்ரீராமன், வானத்துச்சியிற் சூரியன் வரும் நடுப்பகற்பொழுதில் தவறாது செய்தற்கு உரிய மாத்தியாந்நிக சந்தியாவந்தனமென்னும் வைதிகச் சடங்கைச் செய்துமுடித்து, அதன் பின்பு, தன் உயிர்போன்ற தம்பிமார் மூவரோடும் அமர்ந்துசெய்தருளி வீற்றிருந்தான். அப்பொழுது வானத்தில் இவ்வார்த்தை ஓங்கியெழுந்தது :—

“ஐயனே! புவனநாதனே! யான் புட்பகவிமானத்தின் தேவன். எனக்கு முன்னாளிற் குபேரன் உரைத்த சொற்களைக் கருத்தூன்றிக் கேட்பாயாக: ‘தசரதராமனால் அரக்கர்க்கதிபதியாகிய இராவணன் இறத்தல் திண்ணம். அவ்விராவணன் அழிய, அதன் பின்பு, உன்னுடையன்ற உதவியை அவ்விராமபிரானுக்குச் செய்வாய். தீயவனாகிய அவ்விராவணன் இறந்தால்தான் எனது மனோவியாதி விலகும்’ என்று தூயவனான அக்குபேரன் எனக்கு முன்பு மொழிந்தபடியே முடிந்தது. இப்பொழுது யான் சென்று அக்குபேரனைப் பார்த்துவருகின்றேன்.”

புட்பக விமானத்திற்கு உரிய தெய்வம் என்றிங்ஙனம் சொல்ல, கேட்ட இராகவன் வியப்புற்று, ‘உன் கருத்து மிகவும் நன்று’ என்று அதனைக் கொண்டாடி, சந்தனம் முதலிய நறுமணப்பொருள்களையும், சுகந்தம் பொருந்திய மலர்களையுங்கொண்டு பூசித்து, ‘போ’ என்று சொல்லி விடையளித்தான். உடனே, அவ்விமானம், தான் விரும்பிய வடதிசையை நோக்கி, மனம்போல வெகுவேகத்துடன் சென்றது.

அந்த விமானம் பேசி அநுமதி பெற்றுச் சென்ற அதிசயத்தைப் பார்த்த பரதன் ஆச்சரி

யமடைந்து, இராமபிரானைத் தொழுது இவற்றைச் சொல்வான் :—"தூயோய்! இறைவா! இம்மாநிலத்தைக் காக்குமாறு நீ இசைந்தபின்பு வந்த அற்புதச் செயல்களை எண்ணுமிடத்து அவற்றிற்கு ஓர் வரம்பில்லை' என்று உரைத்து, மற்றும் நீ அரசாளத்தொடங்கிய பின்பு இப்பூலோகத்தில் எங்கும் அக்கிரமம் ஆகியவற்றால் எந்தப் பிராணிக்கும் மரணம் இல்லை. கொடிய சிங்கங்களினால் யானைகளுக்குப் பகைமைத்துன்பம் இல்லை. வேங்கைகள், பசுக்களையும் யான்களையும் அடுத்து, அவற்றுடன் அன்புகூர்ந்து நட்புச் செய்யும். நீராலும் நெருப்பாலும் இறப்போர் இல்லை. தமது தனயர் மரிக்கக் காணுந் தாய் தந்தையர் இல்லை. நோயுறுவார் இல்லை. கோபுறமிலே மூத்தோர்க்கும் ஆ[illegible]பிராயம் நிரம்புதற்குமுன்னம் இடையாயுளில் இறுதி நேர்தல் இல்லை. கணவனை இழக்கிற மகளிர் இல்லை. உக்கிரமாக வீசி அழிக்கவல்ல காற்றும், எல்லாவுடலுக்கும் இன்பமாக மெல்லியதாய் வந்து அசையும். மகளிரெல்லாரும் ஆண் குழந்தைகளை அதிகமாகப் பெறுகின்றார்கள். மண்ணுலகத்திலுள்ள மன்னர்களும், மங்கையரும், தாம் எண்ணும் எண்ணங்களிலெல்லாம், 'இராமபிரான்தானே எக்காலத்தும் அரசு செய்து இந்நிலவுலகத்தைக் காக்கக்கடவன்' என்று வெளிபயுற எண்ணி, அங்ஙனமே உறுதியாக வாய்விட்டு உரைப்பார்கள்."

பரதன் இவ்வாறு சொல்ல, ஸ்ரீராமனும் அதனைக் கேட்டு, அவ்விடத்தில் அகமிக மகிழ்ந்து வீற்றிருந்தான். அக்காலத்தில், சூரியன் சாய்ந்து அந்தி அணுக, இரகுகுலதிலகன் சந்தியாவந்தனஞ்செய்யக் கருத்துற்றுச் சென்றான். திங்கள் விரிந்த வெண்ணிலாவை வீசித் தோன்றிற்று. அப்பொழுது, இராமபிரானும் சீதாபிராட்டியும் மனங்களித்திருந்தனர்.

இங்ஙனம் இவர்கள் இன்புற்றிருக்குங்கால், பங்குனிமாதம் வந்தடைந்தது. அந்தப் பின்பனிப்பருவத்தில் மரங்கள் யாவும் பழைய ஆடையை அகற்றிப் புதிய ஆடையை மேற்போர்த்துக்கொண்ட தன்மைபோல, கீழ் உதிர்ந்துவிழுந்த பழுத்த இலைகளையுடையவையாய், காணுந்தோறும் புதிது புதிதாக அழகுமிகத் தளிர்த்தன. சோங்குமரங்கள் தேன் பொழிகின்ற பொன்னிறமான பூக்களை உடைமையால், பொன்னிறமான ஆடையை மேலே போர்த்துக்கொண்டவை போன்றன. சிவந்த மலர்களையுடைய முருக்கமரங்கள் செந்நிறமான பெரிய அழகிய ஆடையைப் போர்த்துக்கொண்டவை போல விளங்கின. இராமபிரானும் சீதாபிராட்டியும், குளிர்ச்சியும் நறுமணமுமுடைய புன்னை, சண்பகம், செருந்தி, சந்தனம், ஜாதி, அழகிய பூக்களையுடைய தாழை, எண்ணிடுதற்கு அரிய குருந்தம், பாதிரி ஆகியான அழகிய விருட்சங்கள் தம்மில் ஒன்றோடொன்று நெருங்கியிருக்கப் பெற்றதும், விண்ணவர் வேந்தனாகிய இந்திரனது கற்பகச் சோலை மேலுலகத்தினின்று பூமியில் இறங்கிவந்தது போன்றுள்ளதுமான அழகு கொண்ட பூஞ்சோலையினிடத்தை அடைந்தார்கள்.

அது, சூரியன் சேர்வதற்கு அரியதாகவுள்ளதாகும். நீலோற்பலமலர்களும் செந்தாமரைமலர்களும் தங்கள் கண்களுக்கு ஒப்பாக முன்னிற்கமாட்டாமல் அஞ்சி நீரிலே ஒளிக்கும்படி சீதாதேவியும் இராமபிரான்தானும் அழகிய துறைகளில் இறங்கிப் படிந்து நீர்விளையாடுதற்கு இடமான தடாகங்களோடு, அந்தத்தடாகங்களின் கரைகளிலெல்லாம் விளங்குகின்ற படிகப்பாறைகளினாலாகிய மண்டபங்களையும் உடையது. இத்தன்மையாகிய இளமரப்பூம்பொழிலின் அழகுகளையெல்லாம் இராமபிரான் மணமுறச் செந்தாமரைமலர்த் திருக்கண்களால் நோக்கியருளி, 'காதலி! இவற்றையெல்லாம் காண்' என்று காட்டியுரைப்பான் :—

"துணைவி! மெல்லிய நடையையுடைய அன்னப்பறவைகள், நினது நடையழகுக்குத் தாம் நிகராகமாட்டாமல் அஞ்சி வெளியிடத்தில் நிற்றற்கு வெட்கப்பட்டு இடைவிடின்றி நெருங்கிய மலர்களையுடைய அழகிய சோலையிலே மறைகின்றன பார்! மயில்கள், நினது சாயலுக்கு நிகராகமாட்டாமல் தோற்று, அத்தோல்வியா

லாகிய அயர்ச்சியால் தமது நடை தளர்ந்து கெட்டு, 'இனி உயிர்தாங்கோம்' என்று தழலில் முழுகுவனபோல, மலர்ந்த பூக்களையுடைய அசோகமரத்தின்மேற் போய் விழுகின்றன. இவற்றைக்காண்பாய். அணங்கே! செல்வமுள்ளபோது இனிது உடன் உண்டிருந்து, அச்செல்வம் நீங்கியபோது அவரோடு உறவுவிட்டு மற்று அச்செல்வம் பொருந்திய இடத்தைத் தேடியடைகிற கீழ்மக்களுறவுபோலவே, உயர்ந்த தருக்களில் பொருந்திய மலர்களின் மதுவை நெடுநாள் உண்டு, மெள்ள அம்மரம் மலர் மாறிவிட, அதைவிட்டு வேறொரு மலர்மரத்தைத் தேடி வண்டுகள் போவனவற்றைக் காணாய்! பைந்தொடி! இதோ தெரிகிற பளிங்கினாலாகிய அறையைப் பார். அது வாழை தன் பக்கத்தில் வந்ததனால் மரகதமாகி, செருந்திப்பூ வந்ததனால் பொன்னாகி, பூவைமலர் பொருந்தினால் நீலமாகி, செந்தாமரைமலர் அடுத்தால் மாணிக்கமாகும். அது ஒழுக்கங்கெட்ட மகளிரது மனத்தை ஒக்கும். மெல்லியலே! பொய்த்தவவேடத்தில் மறைந்து உலகில் வேண்டியபடி தீச்செயல்களைச் செய்பவர்போல, திரியும் மீனைத் தப்பாமல் சொந்தித் தின்னும் உபாயத்தை மிகுதியாக எண்ணிய கொக்குகள் மெய்சலிக்காமல் கண்மூடி மௌனிகளாயிருப்பனவற்றைக் காணாய்! பாவாய்! வண்டுகள் மொய்த்த செங்கமலமலர்கள், கொல்லன் உலைக்களத்தில் கரிமூடிய கனலை ஒப்பன: காணாய்!'

சூரியகிரணங்கள் நுழையமுடியாத தழைத்தடர்ந்த அப்பொழிலிலுள்ள வேறுவேறாகிய விசேடங்களை, 'திருமங்கைபோல்வாய்! காண்' என்று ஸ்ரீராமன் காட்டி, தாமரைத்தடாகத்தின் கரையிலுள்ள படிக்கல்மண்டபத்தில், குளிர்ந்ததும் பரிமளம்வீசுவதுமான தென்றற்காற்று இனிதாக வீசி வழிபடவும், மகளிர் மங்கல வாழ்த்துக் கூறவும், துதிபாடகர் துதிக்கவும் சானகியோடு இனிதாக வீற்றிருந்தான். பொன்னிறமான திருமேனியையுடைய இலக்குமியுடனே திருப்பாற்கடலின் நடுவிலே ஆதிசேஷ சயனத்தின்மேல் பண்டு திருமாலாகிய தான் எழுந்தருளியிருக்கின்ற தோற்றம்போலவும், தோன்றியவளவிலே மறைந்திடுதலில்லாமல் நிலையாய் விளங்குகின்றதொரு மின்னலுடனே கூடி நிலத்திற் படிந்து விளங்குகின்ற கார்மேகம் போலவும், வெண்ணிறமான விசாலமுள்ள பளிங்குமண்டபத்தில் திவ்வியசிங்காதனத்தில் சிவந்த நிறமுள்ள திருமேனியையுடைய சீதாபிராட்டியை இராமன் தனது செந்தாமரைமலர் போன்ற திருக்கையினால் அணைத்துக்கொண்டு இனிது வீற்றிருந்தனன்.

அப்பொழுது இலக்கணப்படி திருந்திய தாளவொலியும் மற்றை வாத்தியங்களின் இசையும் திறம்பாது தழுவும்படி விளம்பிதமாகவும் துருதமாகவும் மத்யமாகவும் வைக்கும் மூவகைப்பட்ட காலவடைவுமுறைகளையும் தவறாமல் தனித்தனி காட்டி, பலவகையாக அபிநயங்காட்டுகிற தமது கைகள் செல்லும் வழியே தமது கண்களின் குறிப்புநோக்கம் செல்லவும், அக்கண்களின் பார்வை செல்லும்வழியே மனத்தின் குறிப்பும் செல்லவும், அழகியமாதர், காண்போர் அதிசயத்தாலும் ஆனந்தத்தாலும் இன்னது புரிவதென்று அறியாது திகைக்கும்படியும், சுவர்க்கலோகத்து வாழ்கின்ற ஊர்வசி அரம்பை முதலிய அமரமாதர் தமது நாட்டியம் இதற்கு ஒப்பாகாதென்று நாணிநிற்கும்படியும் நடனஞ்செய்தனர். ஏழுவகைப்பட்ட இசைகளுக்குக் காரணமான ஏழெழுத்துக்களையுடைய பண்களுக்கு இசைந்தவையான தாளமும் மற்றை வாத்தியங்களும் மாறுபடாமல் ஒற்றுமையாய்த் தழுவும்வண்ணம், அமையச் சுருதிகூட்டி வைத்து, கீதவுருக்களை வாய்விட்டுப் பாடத் தொடங்கி, கண்களும் புருவங்களும் தோள்களும் கண்டமும் அசைந்து விகாரமடையாதபடி, இசைநூல்முறை வழுவுதலின்றி, வேய்ங்குழலினிசையோடும் யாழினிசையோடும் வேறுபாடின்றிக் கலக்கத் தாளஅளவுமுறை தவறாமல், அருகிலுள்ள சராசரமனைத்தும் உருகும்படி துதிபாடகர் இசைபாடினர்.

இராமபிரான் அத்தகையசங்கீதத்தை இனிது கொண்டாடி, பெறுதற்கரிய செல்வத்தையும் ஆடைகளையும் ஆபரணங்களையும் அத்துதிபாட

கர்ச்சுக் கொடுத்து, பிராட்டியோடும் பலவகை மலர்களைக் கொய்து, நீர்விளையாட்டிற் சிறிது பொழுதுபோக்கி, பின்பு அமுதம்போன்ற உணவை இனிது அருந்தி, பிறகு அரண்மனையிற் சேர்ந்ததன்றி, இங்ஙனமே மனைவியும் தானுமாக நாடோறும் விளையாடிக் களித்திருந்தான்.

(இன்னும் வரும்.)

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.

---

## Review of the Press

## பத்திரிகை ஆராய்ச்சி.

### THE BILE AND ITS USES.

### பித்தநீரும் அதன் உபயோகமும்.

மேற்குறித்த விஷயத்தைப்பற்றி சமீபத்தில் வெளிவந்த "வைத்திய கலாநிதி"யில் ஒரு நிருபர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

பித்த நீரானது ஒருவித எண்ணெய்ப்பசையுள்ள வஸ்து. யக்ருத் என்கிற கல்லீரலால் வீனாக்களில் (சுரப்பு இரத்தக்குழாய்களில்) ஓடும் இரத்தத்திலிருந்து உண்டாக்கப்படுகிறது. கல்லீரலின் பிரதானமான சிற்றறைகள் தமது இயற்கையான ஜீவசக்தியினால் இந்த பித்தத்தை குடல்-ப்லீகங்களிலிருந்து கல்லீரலுக்குப் போகும் வீனாவிலிருந்து (Portal vein) வேறுபடுத்தி வெளியாக்குகின்றன. இந்த திரவம் முதலில் சின்னஞ்சிறிய பித்தநீர்க்குழாய்களில் விழுந்து, அப்பால் அச்சிறு குழாய்கள் ஒன்றுசேர்ந்து பரிணமித்த பெரியதோர் பித்தக்குழலின் மூலமாகச் சென்று, சிறுகுடலின் ஆரம்பபாகத்தில் அதன் உள்ளே விழுகின்றது. இரைப்பையில் ஒருவாறு ஜீர்ணமாய் சிறுகுடலில் விழும் உணவோடு இப்பித்தநீர் கலந்து, அவ்வுணவு சாதுக்களால் உறிஞ்சப்படுமாறு அதைப் பக்குவப்படுத்துவதே இதன் முக்கியமான காரியமாகும். குடலில் உணவோடு கலக்கும் பித்தநீரில் சிறிதுபாகம் அத்துடன் தேகத்திலேயே சேர்ந்துவிடும்; அவ்விதம் குடலால் உறிஞ்சப்பட்டு மிச்சமான பாகமெல்லாம் ஜீர்ணமாகாமல் மிகுந்திருக்கும் உணவின் கழிவுகளோடு மிச்ரமாய், மலத்திற்கு ஒருவித நிறத்தையும் கொடுத்து வெளியில் வந்துவிடும். ஜீர்ண வேலை குடலில் நடக்காத நேரங்களில், பித்த தாரை (Cystic duct) என்கிற பித்தக்குழலிலுள்ள மற்றொரு கிளையின் மூலமாய் பித்தாசயம் (Gall bladder) என்கிற பித்தப்பையில் சேர்ப்பிக்கப்பட்டிருக்கும்; இப்படிச்சேர்ந்துள்ள பித்தம் பிறகு குடலில் அவசியமான ஸமயங்களில் பொசிந்துவிழும்.

ஆமாசயம் என்கிற இரைப்பையினால் ஒருவாறு குழைக்கப்பட்ட அநேக வகையான உணவுப்பொருட்களின் குழம்பை இரஸமாக (Chyle) மாற்றுவது பித்தநீரின் முக்கியமான உபயோகங்களில் ஒன்றாகும். இது குடலின் இயற்கையான நெளியும் வேலையைத் துரிதப்படுத்துவதற்குத் தூண்டுதலாகவும் இருந்து, அதன் உள்ளடங்கிய பண்டங்களை மேன்மேலும் விரைவில் தள்ளிக்கொண்டு போகவும் செய்கிறது; ஆகவே எப்பொழுது பித்தம் குறைவுபடுகிறதோ, அப்பொழுது குடல் மிகவும் மந்தப்பட்டு பொருமலுடையதாயிருப்பது வழக்கம். ஒவ்வொரு பிராணியினுடைய பித்தம் ஒவ்வோர் இயல்புடையதாயிருக்கும்; அப்பித்த நீர்களில் அடங்கிய இரஸாயனக் கூறுகளும் பலவாறு பேதப்படும்.

மனிதருடைய பித்தம் பிசுபிசுப்பான ஒருவித திரவம்; பசுமை அல்லது பழுப்பான மஞ்சள் நிறமானது; அருவருப்பான வாசனையுடையது; கைப்பும் குமட்டலுண்டாக்குவதுமான சுவையுள்ளது. தண்ணீரில் ஊற்றினால், இது அமிழ்ந்து அடியில் போய்ச் சேரும்; நாம் கிளறிக் குழப்பினாலேயொழிய தண்ணீரோடு உடனே ஒன்றாகக் கலந்துவிடுவதில்லை; அவ்விதம் கலக்கிக் கலந்துவிட்டால், சவர்க்காரம் தேய்த்த தண்ணீரைப் (Solution of Soap) போல் அந்த ஜலம் நுரைத்துப்போகும். பெர்ஸீலியஸ் என்பவருடைய கொள்கைப்படி இப்பித்தம் அடியில் குறிப்பிடப்படும் அளவில் இரஸாயனக் கூறுபாடுகள் அடங்கியுள்ளது.

பித்தத்தின் பங்கு 1000 ஆனால் அதில்—

| | |
|---|---|
| தண்ணீரின் பங்கு ... | ... 904-4 |
| பிலேன் என்னும் பித்தச்சத்து (கொழுப்பு நிறப்பொருட்களும் சேர்ந்து) ... | 80 |
| ஸ்லேஷ்மவஸ்து (விசேஷமாய் பித்தப் பையிலிருந்து ஊறுவது)... ... | 3 |
| உப்பு வகைகள் ... ... ... | 12-6 |

தேகத்தில் மற்றைத் திரவ ஊற்றுக்களைப் போலவே (Secretions) பித்தநீரும் வியாதி நிலைமைகளில் அதன் இரஸாயனக் கூறுபாட்டில் மாறுதல் அடையும். வயிற்றைப்பற்றிய வியாதிகளிலும், இருதய ரோகங்களி

னும் ஸிரைகள் என்னும் காரிரத்தக் குழாய்களில் இரத்தவோட்டம் தடைப்படுமாகையால், பித்தத்தில் கெட்டிப் பொருள்கள் அதிகரித்துவிடும்; சுகமையான வீக்கங்கள் காணும்போது, கெட்டிப்பொருள்கள் அதில் குறைவாயிருப்பதாகத் தெரியவரும். கல்லீரல் என்னும் அவயவத்தின் இயற்கைச் செயல்களில் கோளாறு சம்பவிக்கும்போது, பித்தமானது இரத்தத்தில் ஊறி தேகத்தில் பரவிவிட, அசலுல் சர்மம் பசுமை நிறம் அடைந்துவிடும்; அதுதான் காமாலையெனப்படுகிறது. கல்லீரல் மந்தமாகப்போய் அல்லது வேறுவித வியாதியைப் பெற்றால், பித்த நீரின் ஊற்று வெகு ஒழுங்கீனமாக ஆய்விடுமாகையால், அப்பொழுது அம்மனிதன் பித்தமாயிருப்பதாகக் கூறுவான்; அதாவது பித்தக் கோளாறு நேர்ந்திருக்கின்றது என்போம்

சிறந்த ஊறுகாய், நல்ல மணமுள்ள ஸம்பாரப் பொடிகள், மது, பாதரஸம், எலுமிச்சம் பழச்சாறு இவ் வஸ்துக்களாலும், உஷ்ணத்தினாலும் பித்தநீர் அதிகமாய் சுரக்கும்; சோம்பித்திரிபவருக்கும் அதிகமாய் உற்பத்தியாவதுண்டு. இலகுவாகவும், அளவில் சொற்பமாகவும் உள்ள உணவுகளாலும், சுறுசுறுப்பாக வேலைகளைச் செய்வது அல்லது வியாயாமங்களைச் செய்வதாலும் அதிகாலையில் எழுந்திருப்பதாலும் பித்தநீரின் பொசிவு ஒருவாறு குறையும்.

## IHAPARASUKAM. *

## இஹபரஸுகம்.

தீயோர்க்கும் நன்மையே செய். ஒருவன் ஒருதாடையில் அடித்தால் மற்றொரு தாடையும் காட்டு. விரோதிகளிடத்திலும் பக்ஷமே பாராட்டு. சாபமிடுபவர்களுக்கும் ஆசீர்வாதமே செய். உன்னை ரொம்பவும் ஹிம்ஸை செய்பவர்களுக்கு நற்புத்திகொடுத்து அவர்களை ரக்ஷிக்கும்படி பகவானை வேண்டிக்கொள்.

காரணமில்லாமல் எனக்குத் தீங்கிழைப்பவனுக்கும் என்னாலாகிய நன்மையே செய்வேன். ஒரு சிறிதும் அவனை வெறுக்கமாட்டேன். வெறுப்பை வெறுப்பினால் ஜயிக்கமுடியாது. அன்பினால் ஜயிக்கலாம். தீமையை நன்மையால் வெல். பேராசை பிடித்தவர்களிடம் தாராள குணத்தைக் காட்டு. பொய்யனுக்கு உண்மையின் உயர்வை உபதேசம்செய். பதிலுக்குப்பதில் தீமைபுரிபவர்களுடைய குணம் எப்பொழுதும் சுத்தமாகாது. கொடியோன் புரியும் தீச்செயல்கள் விருத்தியாவதுபோலவே, நாம் அவனுக்கியற்றும் நற்றொழில்கள், உபகாரங்கள் அதிகமாகவேண்டும்

கெட்ட எண்ணங்களுக்கு மனதில் இடங்கொடாதே. அவை உட்புகுந்தால் உடனே ஓட்டிவிடு. எப்படியெனில், தோன்றும் தீய எண்ணத்திற்கு நேர் விரோதமானதோர் நல்லெண்ணத்தால் முன் சொன்னதை மாற்று. இப்படியே பலநாள் பழகினால் மனத்தின் மாசு அகன்று, தோன்றும் கெட்ட நினைவுகள் எண்ணங்களை தனக்குத்தானே சுத்தமனமானது நல்லவைகளாக மாற்றிவிடும்.

பசுவைக் கொல்லாதே. கொடுமை புரியாதே. பிற உயிர்களைப் போற்று. எல்லோருக்கும் நன்மை செய். கடவுளை அறிபவனே கடவுளாவான். ஸர்வ வல்லமையுள்ள கடவுள் ஒருவரே. அவரே அணுவிலும் மஹத்திலும் இருப்பவர்.

தன்னயங் கோருவதைவிட்டு பிறர் நன்மைக்காகவே பாடுபடும் ஞானிதான் ஆத்ம ஞானத்துக்கு அருகனாவான்.

ஆசாரங்களனைத்திலும் தேகசுத்தி முதன்மையானது. உலக ஆசைகளை முற்றிலும் விட்டு, ஸர்வத்தையும் படைத்து ரக்ஷிக்கும் ஸ்ரீ ஹரியின் பாதாம்புஜத்திலேயே இருதயத்தை ஸதா செலுத்தினாலல்லது உயிர்த்திருப்பதில் உபயோகமில்லை.

முகம் சுருங்கிவிட்டது தலையும் நரைத்தது. கைகால்கள் பலங்குன்றித் தளர்ந்தன. ஆசைமாத்திரம் யௌவன புருஷனுக்கிருப்பதுபோலவே பொங்கித் ததும்புகின்றது.

அஞ்ஞானத்தை ஒழிப்பது என்றால் கடவுளைக் காண்பது என்று அர்த்தம். எவ்வித கவலைகளும் பயங்களும் ஒழிந்து உண்மையில் இருக்கும் ஏக வஸ்துவாகிய சிதானந்த ரூபியைத் தானாகவுணருதலே ஆத்ம ஞானம்.

தனக்கன்னியமின்றி தன்னுள்ளேயே நான் (பகவான்) இருப்பதாக எவன் சிந்தித்திருக்கிறானோ அவனுக்கு வேண்டிய தினசரி சௌகரியங்களை ஏற்படுத்தும் பாரம் என்தலையால் வகிக்கிறேன். என்னையே சர்வத்திலும் கண்டு என்னுள் சர்வமுமிருப்பதை எவன் காண்கிறானோ அவனை ஒருபொழுதும் கைவிடமாட்டேன், அவனும் என்னை விடமுடியாது.

* இது முப்பது மகாத்மாக்கள் எழுதியுள்ள நூல்களினின்றும்; உபநிஷத்துக்களினின்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட 100-நீதிகளடங்கிய ஓர் இனிய நூல். இதிலடங்கிய ஒவ்வொரு நீதியும் ஆழ்ந்த கருத்தைக் கொண்டது. இது ஒவ்வொருவரும் படித்தறியவேண்டிய சிறு நூலாகும். இதன் விலை அணா 2. வேண்டுவோர்: வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, ஓசூர் என்று எழுதிப் பெறலாம்.

# Notes.

## குறிப்புக்கள்.

### இந்தியக் கைத்தொழில்களின் தற்காலத்திய நிலைமை.

இந்தியாவில் கைத்தொழில் அபிவிருத்திக்குத் தேவையான இயற்கைப் பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன. அப்படியிருந்தும், அவை இங்கேயே கைத்தொழிற் செய்யப்படாமற் பெரும்பாகம் அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்விஷயமாய் ஏற்பட்டுள்ள சில கணக்குகளை இங்குக் குறிப்பிடுகிறோம்.

1. இந்தியாவில் உப்பு உற்பத்தி செய்வதற்கான சௌகரியங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவ்விதமிருந்தும் நமது உபயோகத்திற்காக பிரதி வருஷமும் 4,00,000 பவுன்கள் மதிப்புள்ள உப்பு பிறநாடுகளினின்று இறக்குமதி செய்கிறோம்.

2. நமது தேசத்தில் கரும்புப் பயிர்செய்வதற்கான வசதிகள் ஏராளமாகவிருந்தும் நாம் பிரதி வருஷமும் அன்னிய நாடுகளினின்று 6,00,000 பவுன்கள் சர்க்கரை இறக்குமதி செய்கிறோம்.

3. தேசமுழுவதும் இரும்பு கிடைக்கக்கூடிய சுரங்கங்கள் அநேகம் இருக்கின்றன. ஆனால் அவற்றில் வேலைசெய்யும் முறைகளைச் சிலரே அறிவார்கள். இக்காரணத்தினால், நமக்குத் தேவையானவற்றை வெளிநாடுகளினின்றே பெறுகிறோம்.

4. பிரதிவருஷமும் இத்தேசத்தில் உற்பத்தியாகும் ஏறக்குறைய 10,000,000 பவுன்கள் மதிப்புள்ள தோல்கள் அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவை அங்குக் கைத்தொழில் செய்யப்பட்டு மீண்டும் இங்கு இறக்குமதி செய்யப்படுகின்றன.

5. நமது தேசத்திலிருக்கும் சுரங்கங்களினின்று பற்பல உலோகங்கள் கிடைக்கின்றன; அவற்றினின்று போதிய அளவு இரஸாயனப் பொருள்களைச் செய்துகொள்ளலாம். ஆனால், ஒவ்வொரு வருஷமும் 4,00,000 பவுன்கள் மதிப்புள்ள இரஸாயனப் பொருள்களை வெளிநாடுகளினின்று இறக்குமதி செய்கிறோம்.

6. இந்தியாவில் சாயம் போடுவதற்கு உபயோகமான வஸ்துக்கள் ஏராளமாக உற்பத்தியாகின்றன. முன்னே இக்கைத்தொழிலானது வெகு பிரபலமாக நடத்தப்பட்டு வந்தது. ஆனால், ஜெர்மானியரின் போட்டியால் இது நசித்துப்போய்விட்டது. இப்போது வருஷந்தோறும் பிறநாடுகளினின்று 7,00,000 பவுன்கள் மதிப்புள்ள சாயச்சரக்குகளை வாங்கி வருகிறோம்.

7. இத்தேசத்தின் பல பாகங்களிலும் கண்ணாடிகள் செய்வதற்கான வசதிகள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் அவை எவ்விதத்திலும் உபயோகப்படுத்தப்படுவதில்லை. இதனால் வெளிநாடுகளினின்று 8,00,000 பவுன்கள் மதிப்புள்ள கண்ணாடிச் சாமான்களை வருஷந்தோறும் இறக்குமதி செய்கிறோம்.

8. காகிதம் செய்வதற்கான இயற்கைப் பொருள்கள் இங்கு ஏராளமாக இருக்கின்றன; இவற்றில் கொஞ்சம் அன்னிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்விதமிருந்தும், நமக்குத் தேவையான காகிதங்களை வெளிநாடுகளினின்றே இறக்குமதி செய்கிறோம்.

9. நமது தேசத்தில் உற்பத்தியாகும் பருத்தி, சணல், உரோமம் முதலியன அதிகமாக அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவை அங்குக் கைத்தொழில் செய்யப்பட்டு மீண்டும் இங்கு இறக்குமதியாகின்றன.

10. எண்ணெய் வித்துக்களை இங்கிருந்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, இவற்றிற்குப் பதிலாக எண்ணெயை இறக்குமதி செய்கிறோம்.

## செயற்கை மரம்.

மரங்களின் விலை நாளுக்குநாள் அதிகப்பட்டுக்கொண்டே வருவதால், ஸமீபத்தில் ஒரு ப்ரெஞ்சு நிபுணர் செயற்கைமரம் தயார்செய்யும் முறையை கண்டுபிடித்திருப்பதாகவும், இந்த முறையானது சுலபமாயும் செலவு குறைந்ததாயுமிருப்பதாகவும் "ஜனூமோனி" பத்திரிகை எழுதியிருக்கின்றது. இப்பத்திரிகையில் காணும் விவரம் வருமாறு:—

செயற்கை மரம் செய்ய உபயோகிக்கும் மூலப்பொருள் வைக்கோலாகும். வைக்கோலை முதலில் அதற்கென்று செய்யப்பட்ட ஒரு கருவியால் நீளப்போக்கில் கிழித்துவிடுகிறார்கள். பிறகு அதை ஒரு யந்திரத்தில் போட்டு அதோடு வேறு சில சாமான்களையும் சேர்க்கிறார்கள். பிறகு நீராவியால் ஒரு குறிப்பிட்ட அளவு உஷ்ணம் கொடுக்க வைக்கோலும் அதோடு வைத்திருக்கும் பொருள்களும் கலந்து பதமாகின்றன. வேண்டிய அளவுக்கு பக்குவமானபிறகு, அதன்மேல் பாரம் வைத்து அமிழ்த்துகிறார்கள். ரொம்பவும் அமிழ்த்தினால் வைககோலின் நாரும் அதோடு சேர்ந்திருக்கும் பொருள்களும் ஒன்று சேர்ந்து கெட்டியான பலகை போலாகிறது. எவ்வளவு பருமனாகவும் அகலமாகவும் வேண்டுமானாலும் மரத்தை உண்டுபண்ணிக்கொள்ளலாம். யந்திரத்திலிருந்து மரம் வரும்போது மிகவும் நீளமாக இருக்கும். வேண்டிய நீளத்திற்கு அதைத் துண்டுகளாக நறுக்கிக்கொள்ளலாம்.

இது பார்வைக்குச் சாதாரண மரம்போலவே இருக்கும். ரம்பத்தால் அறுத்தால் சரியாக அறுபடும். சிறும்புகள் உண்டாகா. அது சுமாராய் உறுதியுள்ளது. பற்பல வேலைகளுக்கு அதை உபயோகிக்கலாம். வேலைக்கு உபயோகிக்கையில் அது நொறுங்கி உடைந்து போவதில்லை. இந்த செயற்கை மரத்தை விறகாகவும் உபயோகப்படுத்தலாம். இது விறகுகளைவிட இது மலிவாம். இது அதிக புகைக்கட்டாமல் நல்ல ஜ்வாலையுடன் எரிவதோடு அதிக உஷ்ணமும் கொடுக்கிறதாம்.

---

## Books and Reviews.

## புஸ்தகங்களும், விமர்சனங்களும்.

[மானிட ஜீவிய சிந்தாமணி:—கும்பகோணம் டாக்டர் எஸ். சந்திரசேகர் எழுதியது. விலை ரூ. 2—0—0.]

இவ்வரிய நூலில் மானிட தேகத்தின் ஒவ்வொரு பாகத்தைப் பற்றியும் பல சித்திரப்படங்களைக்கொண்டு விரிவாக எழுதப்பட்டிருக்கின்றது. ஒவ்வொருவரிடத்திலும் இந்நூல் இருக்கவேண்டியது அவசியமாகும். வேண்டுவோர்: வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர் என்று எழுதிப்பெறலாம்.

[தாதாபாய் நௌரோஜி:—சென்னை ஜி. எ. வைத்யராமன் அண்டு கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்டது. விலை அணு 3.]

நமது தேசத்தின் முன்னேற்றத்திற்காக இந்நாட்டில் மாத்திரமல்லாமல் பிறநாட்டிலும் தமது ஆயுள் முழுவதும் பாடுபட்ட இம்மானின் ஜீவிய சரித்திரம் எல்லோராலும் படித்தறிந்துகொள்ளுமாறு மிகவும் எளிய தமிழ் நடையில் இனிமையாக எழுதப்பட்டுள்ளது. இன்னும், இதில் அவர் எழுதிய ஸ்வ சரித்திரமும், அவரது முக்கிய விஷயங்களும் அடங்கியுள்ளன. வேண்டுவோர்: வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர் என்று எழுதிப் பெறலாம்.

[ஸலோசனா:—கே. டி. சுந்தரராஜாச்சாரியார் எழுதியது; சென்னை ஜி. எ. வைத்யராமன் அண்டு கம்பெனியார் பிரசுரித்தது. விலை அணு 2.]

இது ஹிந்து புராதன கதைகளில் ஒன்று; சிறுவர் சிறுமியர் முதல் எல்லோரும் வேடிக்கையாகப் படிக்குமாறு எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. வேண்டுவோர்: வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர் என்று எழுதிப் பெறலாம்.

[வளையல் உடன்பாடு:—சென்னை ஜி. எ. வைத்யராமன் அண்டு கம்பெனியார் பிரசுரித்தது. விலை அணு 2.]

இது விரசம் பொருந்திய ஒரு ரஜபுத்ரக் கதை. நமது சிறுவர் சிறுமியர் அவசியம் படிக்கவேண்டிய புஸ்தகமாகும். வேண்டுவோர்: வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர் என்று எழுதிப் பெறலாம்.